சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

WOMEN'S EDUCATION & RESEARCH CENTRE
LIBRARY

உள்ளே
நேர்காணல்:
● சந்திரசேகரன்
● ஈரோஸ் சங்கர் ராஜி
● ஜே.வி.பியின் மீள்வருகை
● கதிரை சுகம் கண்ட கட்சிகள்


விசேட இதழ் 1 | ஜூலை 21, 1994 | விலை 6/=

## கூட்டணி ஏற்காத கூட்டு:

# குருவை மிஞ்சிய சிஷ்யர்கள்

ஜூலை 18ஆம் திகதி வவுனியா நகரில் நடைபெற்ற தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் (ஈரோஸ், ரெலோ, புளொட் கூட்டமைப்பின் புதிய பெயர்) தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய வவுனியா நகரசபைத் தலைவரும் புளொட்டின் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினருமான லிங்கநாதன் (விசு) அவர்கள் தமிழ்க் கட்சிகளிடையே நிலவும் ஒற்றுமையின் வண்ணங்களையும் வடிவங்களையும் அற்புதமாக அம்பலமாக்கி விட்டார்.

நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின இபபோதைய முன்னணி உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், லோகநாதன் கேதீஸ்வரன், அ.வரதராஜப் பெருமாள் ஆகிய மூவரும் வெற்றி பெறக் கூடிய வகையில் தேர்தல் கூட்டு ஒன்றை ஏற்படுத்துமாறு இந்தியா தமிழூர் விடுதலைக் கூட்டணியை வற்புறுத்தியுள்ளது என்றும் அதற்குக் கூட்டணி சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் திரு.லிங்கநாதன் கூறினார்.



கடந்த தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் கழுத்தறுப்புகளில் ஏற்பட்ட மன உடைவுகளே கூட்டணியின் இந்த நிராகரிப்புக்குக் காரணம் என்றாலும் ஆயுதம் ஏந்திய எந்தக் குழுக்களுடனும் தாம் ஒன்று சேரத் தயாரில்லை என்று கூட்டணியினர் இந்தியாவிடம் தெரிவித்து விட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய இயக்கங்களை ஒருங்கிணைத்து அந்தப் பொதுக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப்பினருக்கு இடமளிக்கத் திரைமறைவில் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. அதற்கு நாம் உடன்படவில்லை. காரணம் ஈ.பி.ஆர்.எல்.எப் ஒருபோதுமே எம்மை நேச சக்திகளாகக் கருதியதில்லை என்று தொடர்ந்தும் உரையாற்றுகையில் லிங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்திலாவது மக்களுக்குக் கொஞ்சம் உண்மைகள் தெரிய வருவது நல்ல விஷயம். கூட்டு, ஒற்றுமை என்று வருகிற போது தங்களுடைய குருநாதரான இந்தியாவையும் மிஞ்சும் சீடப்பிள்ளைகள் தான் நமது தமிழ்க் கட்சிகளில் சில என்பது எம்மனைவருக்கும் இன்று நேற்றுத் தெரிந்த விஷயம் அல்லவே! பதினொரு வருட அனுபவத்துக்குப் பிறகும் இந்தியாவுக்கு இது தெரியாமல் போனமைதான் ராஜதந்திரமா அல்லது ஒட்டு மொத்தமான ஞாபக மறதியா என்பது தெரியவில்லை!

## த.வி.கூ.:


# குமாருக்குத் தலைசந்திரிகாவுக்கு வால் !

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடத்தின் சார்பில், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் குமார் தலைமையிலான குழுவை ஆதரிக்குமாறு கோரும் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

ஆயினும், இப்போது கூட்டணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் அவர்களின் மனமாற்றம் காரணமாக, குமார் பொன்னம்பலத்திற்கு கூட்டணி ஆதரவளிக்குமா என்பது சந்தேகமாகியுள்ளது.

பொ.ஐ.முவிற்கான அரசியல் ஆலோசகர்களில் ஒருவராக திரு.நீலன் திருச்செல்வம் இயங்கி வருகிறார் என்பதும், பொ.ஐ.மு.வின் தேசியப் பட்டியலில் திரு.லக்ஷ்மன் கதிகாமரை போடுவதற்கு அவரே காரணமாக இருந்தார் என்பதுவும் பொன்னம்பலத்திற்கோ கூட்டணிக்கோ தெரிந்திருக்கவில்லை எனத் தெரியவருகிறது.

கொழும்பில் குமாரை ஆதரிப்பதாக கூட்டணி கூறியதுடன் அவரது பட்டியலில் தமது உறுப்பினர்கள் ஒருவரையும் வழங்கி தமது 'ஒற்றுமையைக்' காட்டியிருந்தது.




ஐ.தே.க.வோ, பொ.ஐ.மு வோ தமிழர்களுக்கான சரியான பிரதிநிதித்துவத்தைக் கொடுக்காத பேரினவாதக் கட்சிகள் என்ற நிலைப்பாடு காரணமாக, கொழும்பு வாழ் தமிழர்கள் ஒரு தமிழ் குழுவை ஆதரிக்க வேண்டும் என்பது பொன்னம்பலத்தின் வாதம். த.வி.கூவும் உத்தியோக பூர்வமாக ஏற்றிருந்தது.

ஏற்கனவே பொன்னம்பலத்தின் பட்டியலில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த சட்டத்தரணி திரு ராஜரட்னம் அவர்கள் (முன்னாள் நீதிபதி சு.கட்சி எம்பியுமான ராஜரட்னம் அவர்களின் மகன்) வெளிநாடு சென்றிருந்ததால் பட்டியலில் இடம் பெற முடியாமல் போய்விட்டது. வெளிநாட்டிலிருந்து இங்கு திரும்பியிருந்த திரு.இராஜரட்னம் அவர்களை பொ.ஐ.மு பட்டியலில் சேர்ப்பதற்கும் நீலன் முயன்றிருக்கிறார்.

ஒருபுறத்தில் கட்சி பொன்னம்பலத்திற்கு ஆதரவு செலுத்த மறுபுறத்தில் கட்சிக்கு தெரிந்தோ தெரியாமலோ பொ.ஐ.முவிலும் தமிழர்களை நிறுத்த முயன்றிருக்கின்றார். இதில் வேடிக்கை என்னவென்றால் பொன்னம்பலத்தை பா.உறுப்பினராகத்தான் காண விரும்புவதாக பொன்னம்பலத்திடமே நீலன் தனிப்பட்ட முறையில் தெரிவித்திருந்தாராம். இப்போது தெரியவந்துள்ள இவ்விடயத்தால் குமாருக்கும் இவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கசப்பு

கூட்டணியின் ஆதரவை பொன்னம்பலத்திற்கு இல்லாமல் ஆக்கி விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால் கூட்டணியின் பிரதான அரசியல் முடிவுகள் அனைத்தும் நீலனுடைய ஆலோசனையுடனேயே எடுக்கப்படுகின்றன என்றே நம்பப்படுகிறன.



# வன்னியிலிருந்து ஒரு தேர்தல்கால றிப்போர்ட்

## ● ஐயா சிவசிதம்பரத்தாரே..
## ● ஓடிப் போனவர்கள் யார்?
## ● அசட்டுக் காவிச் சிரிப்பு!
## ● நல்ல கவனிப்பு!
## ● அஞ்ஞாதவாசத்திற்கு ஒரு விளக்கம்

வன்னி தேர்தல் தொகுதிக்கான பத்துமுனைப் போட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரவேசம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளிடையே அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளும், இந்திரன் தலைமையிலான சுயேட்சைக்குழுவும் கிராம ரீதியிலான கருத்தரங்குகளும், வாக்காளர் சந்திப்புகளின் மூலமும் தமது ஆதரவைத் திரட்டி வருகின்றன. ஆனால் கூட்டணியோ கருத்தரங்கு பாணியிலான சிறு பிரச்சார கூட்டங்களை நடாத்தி வருகின்றது. இந்த கூட்டங்களில் கூட்டணித் தலைவர்கள் தாம் அரசியல் தளத்திலிருந்து 'அஞ்ஞாதவாசம்' சென்றிருந்தமைக்கான விளக்கங்களையும், கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ''தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லட்சணத்தையும் எடுத்து வைத்து வருவதே இந்த சலசலப்புக்கு காரணமாகியுள்ளது.

கூட்டணி தலைவர்களின் அமைதியான பேச்சாற்றல் மக்களை நெருங்கிக் கவர்கிறது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளை, அவர்களது பிரச்சார கூட்டங்கள் வேகத்தோடு இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையில், கூட்டணியின் இந்தப் போக்கு தமது ஆதரவாளர்களையும் குழப்பி விடுமோ' என்று கிலி கொள்ள வைத்திருக்கிறது.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் 'ஓடிப்போயிருந்த' கூட்டணியினர் பிரவேசிக்க முடியுமா என்ற புளொட்டின் அரசியல் முனைப்பும், பாரம்பரியமாக அரசியல் நடத்தி வருகின்றோம். ஆழ்ந்த அரசியல் பயிற்சியும் அனுபமும் எமக்குண்டு. அரசியலிலிருந்து எம்மை 'புறம்போகச் சொல்ல இவர்கள் யார்' என்ற கூட்டணியின் முனைப்புமே இருசாரரும் காரசாரமாக ஆள்மாறி ஆள் அறிக்கைகளை வெளியிடச் செய்துள்ளன.

மறுபக்கத்தில் 'பாராளுமன்றத்தில் அறிக்கை வாசிப்பவர்களா தமிழ் மக்களின் பிரதிநிதிகள்?' என்ற கூட்டணியின் சாட்டையினால் உந்தப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப், நந்தனார் கதையை உதாரணம் காட்டி, ''ஐயா சிவசிதம்பரத்தாரே! ஒரு நிமிஷம்....'' எனத் தொடங்கி ''சிற்சபேசா சிவசிதம்பரா'' என முடித்து நான்கு பக்க துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னதாக பேரினவாத ஆட்சியிலீழ் ஐக்கிய தேசிய கட்சியில் கடந்தகால தேர்தல் நடவடிக்கைகளான, பணத்தை வீசி ஆட்களையும் வாக்குகளையும் விலைக்கு வாங்குவது, புதிய உடைகளையும் சீல் சாராய போத்தல்களையும் எடுத்து. வீசி வாக்காளர்களை வளைத்துப் பிடிக்கும் கைங்காரியங்களை விளக்கி அவற்றிற்குப்பலிக்கடாவாகி விட வேண்டாம் என எச்சரிக்கை செய்து! லாபாய், லாபாய்! லாபட்ட லாபாய் எனத் தலைப்பிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தையும் ஈ.பி.ஆர்.எல்.எப் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் தெரிவு முறையில் அதிருப்தி கொண்டு சுயேட்சையில் போட்டியிட முன்வந்துள்ள இந்திரனுக்கு (கே.ரீ.குலேந்திரனுக்கு) பக்கபலமாக நின்று வேட்பாளராகவும் துணைபுரிந்த மாமடுவைச் சேர்ந்த கொண்டை அப்புகாமி கடந்த எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை சுயேச்சையின் இந்திரனோடு சென்று வேட்பாளர் மனுவைக் கையளித்த பின்னர் வார இறுதியில் 'வன்னி அம்மையாரின்' 'அரசியல் விலை வீச்சு'க்குப் பலியாகிப் போனார். இதனையடுத்து 'அரைலகரத்துக்கு அரசியல் சோரம்' போன அவர் திங்கட்கிழமை 11ம் திகதி ஐ.தே.க. தனது வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்ய கச்சேரிக்கு வந்தபோது, 'அசட்டுக் காவிச் சிரிப்போடு' கட்சி ஆதரவாளர்களோடு 'அம்மையாருக்கு' (திருமதி இராசமனோகரி புலேந்திரன்) மலர்ச்செண்டு கொடுத்து வாழ்த்தி வரவேற்க காத்திருந்தது பார்வையாளர்களுக்கு 'நல்ல தமாஷாக' இருந்தது.

ஜனநாயக விடுதலை முன்னணி(புளொட்டைப்)யைப் பொறுத்தமட்டில் கடந்த 4 ஆண்டுகளாக நகரிலும் கிராமப்பகுதிகளிலும் மக்களுக்குப் பாதுகாப்பு (பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கள்ளர்கள் ''துஷ்டர்களிடமிருந்து'') வழங்கி ஆற்றிய பொதுச்சேவைகளும், கடந்த நகரசபை தேர்தலின் போது வவுனியா மக்கள் காட்டிய ஆதரவும் தமக்கு இந்த தேர்தலில் குறைந்தது 4 உறுப்பினர்களையாவது பெற்றுத்தரும் என நம்பிக்கையோடு செயற்பட்டு வருகின்றார்கள்.

இந்த நம்பிக்கைக்கு கடந்த நகரசபை தேர்தலில் போட்டியிட்டு அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்ற வார்த்தகரும் இப்போதைய வவுனியா நகரசபையின் உபதலைவருமாகிய வீ.பாலச்சந்திரன் பெற்றிருந்த ஆதரவும் தமக்கு உறுதுணையாக இருக்குமென அவர்கள் நம்புகின்றார்கள்.

புளொட்டைப் பொறுத்தளவில் ஆரம்பத்தில் வவுனியா நகரசபைத் தலைவராகிய (விசு) ஜீ.ரி.லிங்கநாதனை இந்த தேர்தலில் முக்கிய வேட்பாளராக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு அவரது பெயர் பெரிதாக அடிபட்டது. ஆனால் இறுதியில் அவரது பெயர் பட்டியலில் இடம் பெறவில்லை. பாலச்சந்திரனை முதன்மை வேட்பாளராகப் போடப் போவதாகக் கூறியபடிப் பட்டியலில் அவருக்கு இடம் கிடைத்தது. பலத்த ஆலோசனைகளுக்கு மத்தியிலேயே புளொட் தலைவர் த.சித்தார்த்தன் இறுதி வேளையில் வேட்பாளராக சேர்க்கப்பட்டார். இந்தப்பட்டியலில் முதன்மை வேட்பாளராக புளொட் இயக்கத்தின் வன்னிப் பிரம்தியங்க இராணுவ பொறுப்பாளரும் வவுனியா நகர சபை உறுப்பினருமாகிய சரவணபவானந்தன் சண்முகநாதனும் பட்டியலில் (வசந்தன்) இடம் பெற்றுள்ளார்.

வன்னி வாக்காளர்களுக்கு முன்னாள் (புளொட்) தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியின் ஜனநாயக விடுதலை முன்னணியிலிருந்து வசந்தன் முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன் இயக்க உறுப்பினர் அல்லாத பாலச்சந்திரன் ஆகியோர் நிற்கின்றனர். கட்சியின் கணிப்பின்படி மூன்று பேருமே மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியின் கீழ் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் நங்கூரம் சின்னத்தில் ரெலோ தலைவர் அ.செல்வம், வினோ (எஸ்.நோகதாரலிங்கம்) முன்னாள் வடகிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து விலகியுள்ள ஜனாப் அயூசுப் ஆகியாரும் இங்கு போட்டியிடுகின்றார்கள். இவர்களில் ரெலோ தலைவருக்கே மக்களின் அதிகப்படியான வாக்குகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியில் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று, பொதுத் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் பாலசந்திரனுக்கு சமாதான நீதவான் பதவி பெற்றுக் கொடுத்ததே ஈ.பி.ஆர்.எல்.எப் தான் என்று அக்கட்சியின் தீவிர ஆதரவாளர் எமது காதைக் கடித்தார்.

இருமுனைகளில் பிளவுபட்டு நிற்கும் வவுனியா ஐக்கிய தேசிய கட்சி இம்முறை மிகவும் கடுமையான ஒரு சோதனையை எதிர்நோக்கியுள்ளது. ஏற்கனவே தமிழ் கட்சிகளைப் பொது எதிரியாக இங்கு வரித்துக் கொண்டுள்ள ஐ.தே.க ஆண்வழி தலைமைக்காக ஏங்கும் ஒரு பிரிவினரது உள்ளக எதிர்ப்புக்கும் ஆளாகியுள்ளது. கட்சியின் பலதரப்பட்டோரினதும் பொதுவான எதிர்ப்பார்ப்புகளிலிருந்தும் அதிகாரமிக்க பெண்ணாக இருந்தாலும் கூட ஆளுமைமிக்கதொரு தலைவியாக 'வன்னி அம்மையாரினால்' திகழ முடியாமல் போனமையும் இந்த கட்சிக்குள் நிலவும் பெரியதொரு பலவீனமான காணப்படுகின்றது.

இதன் விளைவு வேட்பாளர் தெரிவுமுறையில் வேதனையுற்று பிரிந்த மைத்துனரின் பின்னால் திரண்டுள்ள எதிர்ப்பை மட்டுமல்லாமல், தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ள துணிவுமிக்க பௌத்த துறவியான சியாம் லாகஸ் வெல விமலசார தேரோவின் அதிருப்தியையும் அம்மையார் சம்பாதித்துள்ளார். விமலசார தேரர் சக்திமிக்க தனது பரிவாரங்களுடன் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளர் ஐயாத்துரை கேதீஸ்வரனுடன் அணி சேர்ந்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய கோரிக்கையாக வவுனியாவிலிருந்து ஆயுத குழுக்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். மக்கள் ஆயுத முனையில் அனுபவிக்கும் அச்சுறுத்தல்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பது அண்மைக்காலமாக அழுத்தம் பெற்று வருகின்றது. இக்கட்சியின் முதல் மூன்று முக்கிய வேட்பாளர்களாக வவுனியா மாவட்ட அமைப்பாளர் இராசமனோகரி மன்னார் மாவட்ட அமைப்பாளர் எம்.எல்.அலிக்கான், முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் செமாலை செல்வமணி ஆகியோரும் கடந்த பொதுத் தேர்தலில் ஈரோஸ் மூலம் பாராளுமன்றத்திற்குச் சென்று இந்த தேர்தலின் போது ஐ.தே.கவுக்கு கட்சி மாறியுள்ள ஜயூப் அமரர் புலேந்திரனின் நெருங்கிய சகாவும் முன்னாள் மாவட்டசபை உறுப்பினருமாகிய ரீ.பரமநாதன் ஆகியோரும் மே கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் கிராம சேவை அதிகாரியான பி.சாந்தகுமார் வவுனியா வர்த்தகச் சங்கத் தலைவலராகிய பி.எஸ்.அப்துல்லா மற்றும் மடுக்கந்த மாமடுவ பகுதிகளின் முன்னாள் ஜே.வி.பி இயக்க தீவிர ஆதரவாளருமாகிய விமலநாத ஆகியோரும் வேட்பாளர்களாக வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் குதித்துள்ளார்கள்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளராகிய ஐ.கேதீஸ்வரன் முன்னாள் நகரசபைத் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர். இனப்பிரச்சினை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினாலோ அல்லது ஆயுதம் எந்திய ஏனைய தமிழ் குழுக்களாலோ எதையுமே செய்யமுடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இந்த பொதுத் தேர்தலின்பின் ஆட்சியமைக்கப் போகும் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடக்க வேண்டிய மனம்திறந்த விசுவாசமான பேச்சுவார்த்தைகளிலேயே தங்கியுள்ளது. இவர்களோடு இணைவதனால் என்ன பிரயோசனம் இருக்கின்றது? என்பது தான் அவரது அரசியல் கருத்தாக உள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அவர் வென்றாலும் சரி, தோற்றாலும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தமிழ் பகுதியின் கேந்திர நிலையமாகிய வவுனியாவில் நிலை கொள்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளமையால், அக்கட்சியின் தலைமைப்பீடம் நிச்சயமாக அவரை ''நன்றாகக் கவனித்துக் கொள்ளும்'' சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைப் பிடிக்குமானால் அவருக்கு நிச்சயமாக ஒரு மந்திரி பதவி கிடைக்கத்தான் போகிறது. அது கல்வி மந்திரி பதவியாகக் கூட இருக்கலாம் என்ற கதையும் ஆதரவாளர்கள் மத்தியில் பரவலாக அடிபடுகின்றது.

வன்னி தேர்தல் தொகுதியில் நவசமசமாஜக் கட்சியும் 'நைசாக' வேட்பு மனுவைத் தாக்கல் செய்து போட்டியிட முன்வந்துள்ளது. வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்தும் தமிழ் மக்களின் துன்ப துயரங்கம் குறித்தும் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிட்டும் மாதாந்த அமைச்சரவை இணைப்புகுழு கூட்டங்களிலும் (வட கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமானது. அமைச்சர் தயாரத்தின தலைமையில் நடப்பது) குரல் கொடுத்தும் சேவையாற்றும் கட்சியான இது தனது கொள்கை விளக்கங்களை தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவதற்காக வன்னி தேர்தல் களத்தை ஒரு மேடையாகக் பயன்படுத்தப் போகிறதாம்.

**தம்பு திருநாவுக்கரசு**

# கதிரைச் சுகமும் தமிழ்க் கட்சிகளும்

—கரன் நடராஜன்

தேர்தல் காலம் என்றாலே அரசியல்வாதிகளுக்கு ஒரே கோலாகலமான காலம்தான். ஆறு வருடத்திற்கு ஒருமுறை தமது அரசியல் வாழ்வை மீட்டுக் கொள்வதற்காக யார் யார் காலில் எல்லாம் விழ வேண்டுமோ அவர் காலில் எல்லாம் சாஷ்டாங்கமாக விழுந்து விடுவார்கள். தமது பிழைப்புக்கும் இருப்புக்கும் கட்சியின் நிலைபேறு அவசியம் என்பதால் குறைந்தது ஒருவரையாவது தமது கட்சிசார்பாக பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு தயாராகி விடுவார்கள். அந்தப் பாராளுமன்றக் கதிரையை பிசாசுடன் கூட்டுச் சேர்ந்தாவது கைப்பற்றுவதற்கு இவர்கள் தயங்க மாட்டார்கள். பாவம் மக்கள். அவர்களது உரிமைகள் தேவைகள் என்பவற்றிற்காகவே தாம் தேர்தலில் நிற்பதாகக் கூறிக்கொண்டு தமது அந்தஸ்துக்கும் சுகபோக வாழ்வுக்குமாக வாக்குக் கேட்கும் இவர்களுக்கு வாக்குப் போட்டுத் தான் ஆக வேண்டும் என்ற நிலை அவர்களுக்கு! போடாவிட்டாலோ 'ஜனநாயகத்தை' எதிர்ப்பவர்கள் என பழிக்கு வேறு ஆளாக வேண்டி வந்து விடுகிறதே?

1977ல் தனித் தமிழ்த் திருநாடு அமைப்பதற்கு ஆணைகேட்டவர்களும் அகிம்சை வழியில் உரிமைகளைப் பெற முடியாது, ஆயுதப் போராட்டமே இறுதிவழி எனக் கூறி போராடப் புறப்பட்டவர்களும் இன்று பாராளுமன்றக் கதிரைகளுக்காகவும், பஜீரோக்களுக்காகவும் வாக்குக் கேட்டு நிற்கிறார்கள்.

1977ல் எதிர்க்கட்சி அமைத்த கூட்டணியினர் ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்து 1981ல் மாவட்ட சபைகளைப் பெற்றுக் கொண்டனர். வடகிழக்கில் ஒரு கதையும், கொழும்பில் ஒரு கதையும் ஆடம்பர வாழ்வுமாய் அலைந்த இவர்களின் வேடம் 1983 ஜூலையுடன் கலைந்து போயிற்று. இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்குமாய் ஓட்டமெடுத்த இவர்களுக்கு அப்போதே புரிந்திருக்க வேண்டும் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்கப்போவதில்லை என்று.

ஆனால் புரியவில்லை. (அல்லது புரிந்ததாக கூறிக் கொள்ள விரும்பவில்லை.) ஒரு கையில் அகிம்சையும் மறுகையில் ஆயுதமும் தரித்த வண்ணம் மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முற்பட்டார்கள் (அமீரின் மகன் பகீரதனின் தலைமையில் ஆயுத அமைப்பு செயற்பட்டமை) 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் மீண்டும் தம் மக்களை நோக்கி இந்திய இராணுவ அணிவகுப்புடன் வந்திறங்கினார்கள். மீண்டும் ஒருமுறை மக்களின் காதில் பூச்சுற்ற முனைந்து பாடம் கற்றார்கள். வரலாறு காணாதவாறு தோத்தவில் தோற்றார்கள். 'வீரமும் களத்தே போட்டு வெறும் கையோடு சென்னை புகுந்தார்கள். இன்றைய கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் அவர்கள்' புறப்பட முன்பு நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்திருந்தார். ''பதவிகளை நாடாமல் மக்கள் சேவை செய்ய எண்ணியுள்ளேன். கட்சியிலோ அல்லது வேறு எதிலுமோ நான் இனிமேல் பதவியை நாடப் போவதில்லை. நான் அரசியலில் பல பிழைகளை விட்டுள்ளேன். அதற்காக மாசற்ற அன்பைத் தந்த மக்கள் மன்னிப்பார்கள்' (இவ்வறிக்கை தரப்பட்டுள்ளது)

இவ்வாறெல்லாம் கூறி விட்டு சென்னை புறப்பட்ட தலைவரும் வேறு நாடுகளில் அஞ்ஞாதவாசம் புரிந்தவர்களும் மீண்டும் மக்களை ஏமாற்றப் புறப்பட்டு விட்டார்கள். மாசற்ற அன்பைக் கொடுத்த மக்களை இன்னுமொருமுறை மன்னிக்கச் சொல்லப் போகிறார்கள்! (விட்ட பிழைகள் என்னவென்று அவர் இன்றுவரை சொன்னதில்லை! சொன்னால், இப்போது திருந்திவிட்டீர்களா என்ற கேள்வி எழும் என்ற பயமோ என்னவோ?)

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது கூட தமிழ் மக்களின் பாதுகாப்பைக் காரணம் காட்டி தேர்தலில் போட்டியிடாது இவர்கள் ஒதுங்கியிருந்தனர். இது தொடர்பாக முன்னாள் கூட்டணி எம்.பி ஜோசப் பரராஜசிங்கம் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்; ''கிழக்கில் மட்டும் தேர்தலை நடாத்தி விட்டு அங்கு மக்கள் ஜனநாயகரீதியில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து விட்டார்கள். வடக்கில் மட்டுமே பயங்கரவாதப் பிரச்சினை எனக்காட்டி வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு அரசாங்கம் நடாத்தும் ஒத்திகையே இத்தேர்தல். அதனால் இத்தேர்தலை நாம் பகிஷ்கரிக்கிறோம். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் தொகையில் 90%த்தினர் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்கின்றனர். இந்நிலையில் தேர்தலில் கலந்து கொள்வதாயின் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்ப்பை முன்வைக்க வேண்டும், இல்லாமல் தேர்தலில் போட்டியிடமாட்டோம்''

ஆயின், இப்போது கிழக்கிலும் வடக்கிலும் உண்மையான தேர்தலா நடைபெறப் போகிறது? அங்கு ஜனநாயகபூர்வமாக மக்கள் வாக்களிக்கும் நிலை உள்ளதா? மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெயர்ந்து சென்ற 90% மக்கள் மீண்டும் குடியமர்ந்து விட்டனரா? அன்றியும் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன் வைத்து விட்டதா? அல்லது பொது ஜன முன்னணியாவது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு ஏதாவது உருப்படியான தீர்வுகளை முன்மொழிந்துள்ளதா? எல்லாமே பூச்சியம்தான். அப்படியாயின் உள்ளூராட்சி தேர்தலைப் பகிஸ்கரித்த கூட்டணியினர், இப்போது மட்டும் ஏன் வேஷ்டி கட்டி கும்புடுகரணம் போடுகிறார்கள்? விடை வேறொன்றுமல்ல. வடிகட்டிய சுத்தமான பதவி ஆசைதான் என்பதை தவிர. (சில வேளை இவர்களது இந்திய எஜமானர்களும் இலங்கை நண்பர்களும் கேட்குமாறு கூறியிருக்கலாம்!)

# 'பதவிகளை நாடாமல் மக்கள் சேவை செய்ய எண்ணியுள்ளேன்'

## சென்னை புறப்படுமுன்னர் சிவா அறிக்கை

[அன்டன் எட்வேர்ட்]

"எனது சக்திக்கு ஏற்ப மக்கள் சேவை மேற்கொள்ள



எண்ணியுள்ளேன். கட்சியிலோ, வேறெதிலுமோ நான் இனி மேல் பதவி நாடப் போவதில்லை"

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்று சென்னை செல்வதற்கு முன்னர் "கேசரி"க்கு அனுப்பி வைத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

"நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், எனக்கும் தங்கள் அன்பான வாக்குகளை அளித்த யாழ். மாவட்ட மக்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அரசியலில் பல பிழைகளை விட்டுள்ளேன் என்பதனை இன்று உணர்கிறேன்.

மாசற்ற அன்பை எப்போதும் எனக்குத் தந்த தமிழ் மக்கள் எனது பிழைகளை மன்னிப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.

ஆனல் செய்த பிழைகளுக்கு தண்டனை அனுபவிக்க வேண்டும். என்று தமிழ் மக்கள் தீர்மானித்து விட்டார்கள். இதை பணிவாக ஏற்றுக் கொள்கிறேன்.

என்னுடைய வாழ்வில் எஞ்சியுள்ள சொற்ப காலத்தை மக்கள் சேவையில் செலவிட விரும்புகிறேன். எனது சக்திக்கு ஏற்ப மக்கள் சேவை செய்ய எண்ணியுள்ளேன்.

கட்சியிலோ, வேறு எங்குமோ பதவிகளை ஏற்காமல் மக்கள் பணி செய்ய முடிவு செய்துள்ளேன்.

உண்மையில் உள்ளூராட்சி தேர்தல்கால சூழ்நிலையே இன்றும் நாட்டில் நிலவுகிறது. வட மாநிலத்தில் உள்ள இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் யுத்த அனர்த்தங்கள் இன்றும் தொடர்கிறது. யாழ் மாவட்டத்தில் உள்ள 6 லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களில் 6000க்கும் உட்பட்டோர் மட்டுமே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கின்றனர். கரையோரப் பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள போதும் சனநடமாட்டம் இல்லாத சூனியப் பகுதியாகவே உள்ளது. வேட்புமனுத் தாக்கல் நடை பெற்ற தெல்லிப்பழை பகுதியிலேயே மக்கள் இன்றிய உடைந்த கட்டடக் குவியல்களே காணப்பட்டன என வேட்புமனுத் தாக்கல் செய்யச் சென்ற கட்சிப்பிரமுகர் குறிப்பிட்டுள்ளார். ஆயின் அங்கு யாருக்காக தேர்தல் நடாத்தப்படுகிறது? அங்கு போட்டியிடுபவர்கள் உடைந்த கட்டடக் குவியல்களினதும் இறந்தவர்களின் எலும்புக் கூடுகளினதும் பிரதிநிதிகளாகவா தெரிவு செய்யப்படப் போகிறார்கள்?

இதே நிலைதான் வவுனியா, மன்னார், முல்லை மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியிலும் நிலவுகிறது. வவுனியாவில் 72,500 வாக்காளர்களில் 47,000 பேரே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கின்றனர். 65 வாக்களிப்பு நிலையங்களில் 41ல் மட்டுமே வாக்களிக்கமுடியும். 54,500 வாக்காளர்களையும் 54 வாக்களிப்பு நிலையங்களையும் கொண்ட மன்னாரில் 18 வாக்களிப்பு நிலையங்களில் ஏறத்தாழ 20,000 பேரே வாக்களிக்கக் கூடிய நிலையில் உள்ளனர். 52,000 வாக்காளர்களையும் 50 வாக்களிப்பு நிலையங்களையும் கொண்ட முல்லைத்தீவில் ஒரே ஒரு வாக்களிப்பு நிலையமாகிய மணலாற்றில் 1,500 பேரே வாக்களிக்க முடியும். ஆக 170,000 வாக்காளர்களையும் 169 வாக்களிப்பு நிலையங்களையும் கொண்ட வன்னி தேர்தல் மாவட்டத்தில் 60 வாக்களிப்பு நிலையங்களில் 82,000 வாக்காளர்களே வாக்களிக்கக் கூடியவர்களாக உள்ளனர். எனவே இங்கு 109 வாக்களிப்பு நிலையங்களில் அண்ணளவாக 97,000 பேர் வாக்களிக்க முடியாதவர்களாக உள்ளனர். அதாவது 60%த்திற்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க முடியாது.

கிழக்கிலும் அம்பாறை திருகோணமலை மட்டக்களப்பு பகுதிகளில் இடம்பெயர்ந்த 90%மானவர்கள் தமது சொந்த இடங்களில் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. இவற்றின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை படையினரே மேற்கொள்கின்றனர். நகரங்களையும் அவற்றை அண்டிய பகுதிகளையும் தவிர்ந்த உள்ளூர்ப் பகுதிகள் பல இன்னும் புலிகளின் ஊடுருவலுக்கு, கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாகவே உள்ளன.

இந்த நிலைமையில் யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடாத்துவது மனித உரிமை மீறல் என வழக்குத்தாக்கல் செய்துள்ள கூட்டணி அப்புக்காத்துமாருக்கு கிழக்குப் பகுதியினதும் வன்னி மாவட்டத்தினதும் அமைதியின்மை அவலம் புரிய வில்லைப் போலும். இவர்களின் சட்டப்புத்தகத்தில் 6,000 பேரைக் கொண்டு ஆறுலட்சம் மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வது நியாயமில்லை என எழுதியிருக்கின்றது. ஆனால் 82,000 வாக்காளர்களினால் எஞ்சியுள்ள வாக்களிக்க முடியாத நிலையிலுள்ள 97000 வாக்காளர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்யலாமா என்பது பற்றி ஒன்றுமே எழுதப்பட்டிருக்கவில்லைப் போலும். அதனால் ஏனைய பகுதிகளின் தமிழ் பேசும் மக்களின் அவலங்களை உலகுக்கு எடுத்துக் காட்ட போட்டியிடுகிறார்களாம்.

கூடவே இம்முறை குமார் பொன்னம்பலமும் பக்கபலமாய் நிற்கிறார். இவரது சட்டப்புத்தகம் சற்று விசித்திரமானது. அதில் ஜனாதிபதி தேர்தலில், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடலாம் என எழுதப்பட்டுள்ளது. உள்ளூராட்சி, மாகாணசபைத் தேர்தல்களில் மட்டும் போட்டியிடக் கூடாது. ஏனெனில் அவை வடகிழக்குப் பிரிப்புக்கு ஒத்திகை நடாத்தும் அரசாங்கத்தின் சூழ்ச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாம். இவர் தனது சட்டத் தொகுப்பை புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது திடீரெனச் சொல்வார் நாம் எல்லோரும் சேர்ந்து தேர்தலில் வாக்குச்சீட்டினை வீணடித்து எமது எதிர்ப்பு உணர்வை உலகிற்கு காட்டுவோம் என்று. திடீரெனச் சொல்வார் நாம் எல்லோரும் சேர்ந்து பேரினவாதக் கட்சிகளுக்கு எதிராக தமிழனுக்கு வாக்களித்து எமது எதிர்ப்பைக் காட்டுவோம் என்று. இதுதான் குமாரின் புதியபாதை?

ஆயுதக் குழுக்களைப் பொறுத்தவரை எழுதுவதற்கு என்ன இருக்கிறது. அப்புக்காத்து அரசியலின் வங்குரோத்துத்தனத்தை வெறுத்து அகிம்சாவழிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்கள் இவர்கள். புதிய பாதை அமைக்கப் புறப்பட்டவர்கள். அதனால் தேர்தல் வழிமுறைகளையும் பாராளுமன்ற அரசியலையும் முற்றாக நிராகரித்தவர்கள் 1981ல் மாவட்ட சபைத் தேர்தலின் போது யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி தேர்தல் கூட்டத்தைக் குழப்பியதும், கந்தர்மடம் பாடசாலைத் தேர்தல் சாவடிக்கு குண்டு வீசி தேர்தலைக் குழப்பியதும் இப்போதைய வன்னியின் சிங்கங்களாக விளங்கும் புளொட் இயக்கத்தினர் தான். இப்போது இவர்களுக்கும் தேர்தல்மீது ஆசை பிறந்துவிட்டது. இவர்களின் ஒற்றுமை முன்னணியில் அங்கம் வகிக்கும் கிழக்கின் விடிவெள்ளிகள் எனத் தம்மை அழைக்கும் ரெலோ இயக்கத்தினரே கூட்டணித் தலைவர்களான முன்னாள் மானிப்பாய் தொகுதி எம்.பி.வி.தர்மலிங்கம், கோப்பாய் தொகுதி எம்.பி.ஆலாலசுந்தரம் ஆகியோரைச் சுட்டுக் கொன்று சுடலையில் தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டவர்கள். (இது தர்மலிங்கம் எம்.பியின் மகன் சித்தார்தன் அவர்களுக்கும் தெரியும்)

இவர்களின் அடுத்த கூட்டாளியான ஈரோஸினர் பற்றி நினைக்

→ 7



# "எங்களுக்கு இந்தியா உதவவில்லை"

– ஈரோஸ் சங்கர் ராஜி

**நீங்கள் (ஈரோஸ்), ரெலோ, புளொட் ஆகிய மூன்று அமைப்புகளும் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி என்ற பெயரில் ஒன்றாக இணைந்துள்ளீர்கள்? என்ன அடிப்படையில் ஒன்றாக இணைந்துள்ளீர்கள் என்று சொல்ல முடியுமா?**

ஆரம்பத்தில் பா.தெ.குழு இனப்பிரச்சினையை விவாதிக்கிற போது ஏழு தமிழ்க் கட்சிகள் ஒன்றாகக் கூடி ஒரு பொதுநிலைப்பாட்டின் அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைக்கிற நிலைமை இருந்தது. அந்நேரத்தில் குறைந்தபட்ச இணக்கம் ஒன்றைத் தமிழ்க் கட்சிகளிடையே கொண்டு வரவேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தது. குறிப்பாக வட.கிழக்கு இணைப்பு, சுயாட்சி, அதிகாரப்பரவலாக்கல் என்பவற்றில் எந்தவொரு கட்சிக்கும் பெரிய வேறுபாடு இருக்க முடியாது. இவ்வடிப்படையில் ஒரு குறைந்தபட்ச இணக்கத்துக்கு வரலாமா என்ற யோசனை இருந்தது. அதே நேரத்தில் இயக்கங்களுக்கு வெவ்வேறு ஆரம்பம், செயற்பாடு, நடைமுறை அன்றாட முடிவுகள், இயக்க கலாசாரம், வரலாறு எல்லாம் வேறுபட்டு இருக்கின்றன என்று உணர்ந்து கொண்டு அதில் ஒவ்வொருவரும் குறுக்கிடாமல் இணக்கத்தைக் கொண்டு வரலாமா என்றும் நாம் சிந்தித்தோம். இது தவிர எங்களுடைய நோக்கங்களையடைய ஒருமைப்பாடான முறையில் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்கிற ஏக்கம் தமிழ்மக்களிடம் இருந்தது.

இரண்டாவது தமிழர் பிரதிநிதித்துவம் சம்பந்தமானது. அம்பாறை, திருமலை மாவட்டத்தில் தமிழ்க்கட்சிகள் பிளவுபட்டு நின்றால் அது பேரினவாதக் கட்சிகளுக்கோ முஸ்லீம் கட்சிகளுக்கோ சாதகமானதாகி விடும் என்பது. மக்களும் இதனைச் சுட்டிக் காட்டினார்கள்.

மூன்றாவது சர்வதேச ரீதியாக எமது பிரச்சாரத்தை எடுத்துச் செல்ல இந்த இணக்கம் மிக அவசியமானதாக இருந்தது. இது தான் நாம் இணைந்ததற்கான அடிப்படை.

**அவ்வாறானால் நீங்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் ஏன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவில்லை?**

நாங்கள் கூட்டாகத் தான் இந்த முயற்சியில் இறங்கினோம். ஆரம்பத்தில் ரெலோவும், புளொட்டும் ஒரு இணக்கத்துக்கு வந்தார்கள். பின்னர் அவர்கள் எம்மை அணுகினார்கள். பிறகு எம்மிடம் ஈ.பி.ஆர்.எல்.எப்ஐ அணுகும் பொறுப்புத் தரப்பட்டது. நான் சுரேஷ் பிரேமச்சந்திரனை இரண்டு முறை சந்தித்தேன்.இதைப் பற்றிப் பேசுவதற்காக. அவர்கள் தம்முடைய மத்திய குழுக் கூட்டம் நடைபெறுகிறது. முடிந்தவுடன் இதுபற்றி முடிவு சொல்கிறோம் என்றார்கள். ஆனால் அது ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. அதே நேரத்தில் புளொட்டும், ரெலோவும் தனித்தனியாகக் கூட்டணியைச் சந்தித்துப் பேசினார்கள். இது தவிர நானும் தங்கத்துரையைச் சந்தித்துப் பேசினேன். ஆனால் அதுவும் கைகூடவில்லை. கூட்டணியும், ஈ.பி.ஆர்.எல்.எப் சேர்ந்து ஒரு இணக்கத்துக்கு வருவதாகவும், கூட்டணியின் பட்டியலில் ஈ.பி.ஆர்.எல்.எப் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிடுவது தொடர்பாகவும் முயற்சி எடுக்கப்பட்டதென்றும் அது கைகூடவில்லை என்ற நிலையில் தான் ஈ.பி.ஆர்.எல்.எப் தனித்துப் போட்டியிடுகிறது என்றும் இன்று நாம் அறிகிறோம். ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டணியுடன் ஒரு இணக்கத்துக்கு வரலாம் என்ற அடிப்படையில் தான் எம்முடன் இணைவதை தாமதித்து வந்தது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஈ.பி.டி.பி தேர்தலைப் பற்றி அந்நேரத்தில் எந்த நிலைப்பாட்டையும் தெரிவிக்காததால் அதனுடன் பேசவில்லை. இன்றும் கூட அது யாழ் மாவட்டத்தில் மட்டும் தான் போட்டியிடுகிறது. அது தவிர எங்களுடைய அனுபவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப எப்போதும் ஈ.பி.டி.பி வந்தால் தாங்கள் நிற்க மாட்டோம் என்று சொல்வதும் புறக்கணிப்பதுமாயிருந்ததும் தெரிந்ததே. ஆகையால் நாம் அதனை ஆர்வமான முறையில் முன்னெடுக்கவில்லை. ஆனால் நாம் காலப்போக்கில் அம்மாதிரியான முயற்சியைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.



**உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த சிலர் புளொட்டினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப் பட்டதாகக் குற்றம் சாட்டியிருந்தீர்கள். இது உங்களுடைய ஒற்றுமை முன்னணிக்கான உறவைப் பாதிக்கவில்லையா?**

இன்று ஒரு பொது இணக்கத்துக்கான தேவை இருக்கிறது. மக்கள் மத்தியில் பிரச்சினை இருக்கிறது. எனவே நீங்கள் குறித்தவாறான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்தால் இவ்வாறானதொரு இணக்கத்திற்கு வரமுடியாது. அதனால் தான் நான் ஏற்கனவே கூறியபடி இம்மாதிரியான விடயங்களை கணக்கிலெடுக்காமல் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம்.

**தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் கீழ் கிழக்கில் ரெலோ சின்னத்தின் கீழும், வவுனியாவில் புளொட் சின்னத்தின் கீழும், யாழ் தீவுப்பகுதியில் ஈரோஸ் சின்னத்தின் கீழும் போட்டியிடவுள்ளதாகக் கூறப்படுகிறது. என்ன அடிப்படையில் இவ்வொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது?**

மூன்று அமைப்புகளுமே ஏதோவொரு இடத்தில் தங்களது தனித்துவத்தைப் பேண வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. ஈரோஸ் சென்ற தேர்தலில் கூடுதலாக யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி இருந்ததால் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பில் ரெலோ, புளொட் கூட்டு உள்ளூராட்சித் தேர்தலில் கூடுதலாக வெற்றி பெற்றிருந்ததால் ரெலோ போட்டியிடுவதாகவும், வன்னியிலும் புளொட் வெற்றி பெற்றிருந்ததால் புளொட் போட்டியிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

**உங்களுடைய தேர்தலுக்கான நிதியை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்? இந்தியா உங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்க்கும் நிதி வழங்கியதாகப் பேசப்படுகிறதே?**

நான் நினைக்கிறேன் இது வரலாற்று எச்சசொச்ச நிலைப்பாடு. இந்தியாவினுடைய ஈடுபாடு கடந்த பொதுத் தேர்தலில் எவ்வாறு இருந்தது என்பதும் ஒரு பொது அறிவு. இதுவரையில் அந்த விதமான எந்த உதவியையும் பெறவில்லை. தேர்தலைப்பற்றி உத்தியோக பூர்வமாகவோ தனிப்பட்ட முறையிலோ எந்த ஒரு இந்திய அதிகாரியுடனும் நாங்கள் பேசவுமில்லை. தொடர்பு கொள்ளவுமில்லை. எங்களுடைய நிதியைப் பொதுமக்களிடமிருந்தும், ஆதரவாளர்களிடமிருந்தும் தான் திரட்ட வேண்டியுள்ளது. கூடுதலாக வெளிநாட்டிலுள்ள ஈரோஸ் ஆதரவாளர்கள் முன்வந்து அதனைப் பொறுப்பெடுத்திருக்கிறார்கள்.

**உங்களுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஒரு நாளைக்கு பத்து இந்திய விசா வழங்குவதாகவும் அதனை வெளியில் தலா 6000 ரூபாப்படி நீங்கள் விற்பதாகவும் பேசப்படுவது பற்றி...**

இந்திய உயர் ஸ்தானிகராலயம் அனேகமான கட்சிகள், பிரமுகர்கள், அரசியல்வாதிகளது சிபார்சில் விசா வழங்குவது உண்மை. இதில் நாங்கள் விதிவிலக்கல்ல. ஆனால் அது வியாபார ரீதியானது அல்ல. விசா எடுப்பதற்குப் பல பேர் திண்டாடுகிறார்கள். எங்களையும் வந்து அணுகுவார்கள். ஒரு சிலர் எங்களுடைய ஆதரவாளர் மூலமும் அறிமுகமானவர்கள் மூலமும் வரும் போது இவர்கள் எங்களுக்கு அறிமுகமானவர்கள் என்ற சிபார்சை மட்டும் கொடுக்கலாம். விசாவை எடுத்துக் கொடுக்க முடியாது. அதனைக் கூட ஜூலை 3ம் திகதியுடன் நிறுத்தி வைத்திருக்கிறோம். ஏனெனில் பாரபட்சம் காட்டுவதாக, இந்த மாதிரியான வியாபார நோக்குடன் நாம் நடக்கிறோம் என்ற அபிப்பிராயம் எழுந்துள்ளது. அதனால் நாம் அதனை நிறுத்தி வைத்துள்ளோம். ஆனால் நிரந்தரமாக அல்ல. சில மாற்று ஏற்பாடுகள் செய்தபின் தொடர்வோம்.

**இத்தேர்தலில் போட்டியிடுவதனூடாக எதையாவது சாதிக்கலாம் என எண்ணுகிறீர்களா?**

ஒரு அரசியல் கட்சி என்று இருந்தால் தேர்தலைச் சந்திக்க வேண்டியது ஒரு தேவை. அல்லாவிடின் அந்தக் கட்சிக்கு எதுவித செயற்பாடும் இல்லாது போய்விடும். இது முதலாவது. மற்றையது ஏதோவொரு வகையில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் தேவை. அதில் எவ்வளவு நன்மை இருக்கிறது தீமை இருக்கிறது என்பது விவாதத்திற்குரியது. ஆகையால் எங்களுடைய பங்களிப்பு இதில் இருக்கிறது. அது தேவை என்ற அடிப்படையில் தான் நாங்கள் இந்தத் தேர்தலில் பங்கு கொள்கிறோம். வரலாறு தான் தீர்மானிக்க வேண்டும். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நின்று யாருமே எதையுமே சாதிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் ஒரு சிலர் நன்மை அடைந்ததைத் தவிர.

**யாழ்ப்பாணத்திலுள்ள பாலகுமாரது ஈரோஸிற்கும் உங்களது ஈரோஸிற்கும் உள்ள உறவென்ன?**

எங்களைப் பொறுத்தவரையில் பாலகுமார் ஈரோஸ் என்ற ஒன்று இப்போது இல்லை. அவரே பல தடவை அதனைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார். அவர் வி.புலிகளது தமிழீழக் கல்விச் சேவையின் உப தலைவர் என்ற ரீதியில் தான் விடுதலைப்புலிகளது கடந்த மேதினக் கூட்டத்திலும் பேசியிருக்கிறார். அது இங்கு பத்திரிகையிலும் வெளிவந்தது. ஆகையால் திரும்பத் திரும்ப பாலகுமார் ஈரோஸ் என்று கேட்பதில் அர்த்தமில்லை.

**நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**


ஒரு போராட்ட நிலைப்பாடு தொடர்ந்து இருக்கிறது. பேச்சுவார்த்தையில் ஒரு தீர்வு வரும் வரைக்கும் அந்த நிலைப்பாட்டில் மாற்றமும் ஏற்படாது. ஏற்படவும்கூடாது. ஆகையால் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை முன்வைத்து அதனடிப்படையில் தான் இந்தப் போராட்டத்தை அணுக முடியுமே தவிர போராட்டத்தை முதல் அணுகி தீர்வைப் பற்றிப் பிறகு பேசலாம் என்கிற நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

**வடகிழக்கு மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வடகிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பல கட்சிகள் பல்வேறு நிலைப்பாடுகளில் முன்நிற்கின்றன. நாங்கள் ஒன்று கூற விரும்புகிறோம். இந்தத் தேர்தலில் இல்லாவிட்டாலும் அடுத்த தேர்தலிலாவது தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு நிலைப்பாட்டை எடுக்க அவர்கள் இக்கட்சிகளை நிர்ப்பந்திக்கும் ஒரு கடமை அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் அதனைச் செய்வார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

# இரண்டு பேரினவாதக் கட்சிகளும் எம்மை ஏமாற்றவே முயல்கின்றன!

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன்



**ஆரம்பத்தில் மலையகத்தில் உள்ள சிறிய கட்சிகள் தொழிற்சங்கங்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவுள்ளதாக செய்தி வெளியாகியிருந்தது. பின்பு பொதுஜன முன்னணியுடன் தேர்தல் உடன்பாட்டுக்கு வந்துவிட்டதாக பரவலாக எல்லோராலும் பேசப்பட்டது. இறுதியில் இவ்விணைவுக்கான முயற்சிகள் எவையுமே சாத்தியமாகவில்லையெனவும் நீங்கள் சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளீர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தைகள் எந்தக் கட்டத்தில் எத்தகைய சூழ்நிலையில் முறிவடைந்தன எனக் குறிப்பிட முடியுமா?**

உண்மையில் மலையகத்தில் உள்ள ஏனைய அரசியல் சக்திகள் யாவற்றையும் ஓரணியின் கீழ் இணைத்துப் பொதுக் கோரிக்கையின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட விரும்பினோம். இவ் ஒருங்கிணைவு வெறுமனே தேர்தல் கூட்டாக மட்டுமன்றி எதிர்காலத்தில் மலையக மக்களின் அரசியற் கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பலம் பொருந்திய சக்தியாக உருவெடுக்கும் எனவும் நம்பினோம். ஆனால் அதில் எல்லா அமைப்புக்களையும் இணக்கப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடியவில்லை. எனவே இதன் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை பொதுஜன முன்னணியுடன் ஆரம்பித்தோம்.

இப்பேச்சுவார்த்தையின் ஆரம்பக்கட்டத்திலேயே நிபந்தனையற்ற எந்த ஒரு கூட்டுக்கும் நாம் தயாரில்லை என்பதை அவர்களுக்கு புலப்படுத்தியிருந்தோம். அந்தவகையில் எமது ஆறு அம்சக் கோரிக்கையை முன் வைத்தோம்.

***1) மலையக மக்கள் தனித்துவமான சிறுபான்மையினம் என்ற அடிப்படையில் மலையகப் பகுதியின் கல்வி, மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தனியான திட்டம் தீட்டப்படுவதோடு அதற்கான நிதி ஒதுக்கீடும் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட வேண்டும்.***

***2) தோட்டக் குடியிருப்புகள் யாவும் உள்ளூராட்சி சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.***

***3) சகல மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைப் பிரஜைகளாக பிரகடனப்படுத்தப்படுவதோடு பிரஜாவுரிமை சான்றிதழ் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.***

***4) தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் விதத்தில் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.***

***5) தோட்டத் தொழில்துறையும் தொழிலாளர்களின் உரிமைகளும் சலுகைகளும் பாதுகாக்கப்படும் விதத்தில் ஒரு பரிபாலன நிறுவனம் அரசினால் ஏற்படுத்தப்படுவதோடு தன்னிச்சையாக நடந்து கொள்ளும் தோட்ட நிர்வாகத்தை பொறுப்பேற்பதற்கும் அதிகாரமும் அதற்கு வழங்கப்பட வேண்டும்.***

***6) சகல அரசியற் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.***

இக்கோரிக்கைகள் யாவும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற வேண்டும் என வற்புறுத்தினோம். அவை சேர்க்கப்படுவது உறுதிப்படுத்தப்படாததால் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது செய்து கொள்ள விரும்பினோம். அவர்கள் எமது கோரிக்கைகளை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டார்களே தவிர எழுத்து வடிவில் தர தயக்கம் காட்டினார்கள். வெறும் கொள்கையளவிலான வாக்குறுதிகளை மட்டும் நம்பி தேர்தல் உடன்பாட்டிற்கு எம்மைத் தாழ்த்திக் கொள்வது ஒரு கேலிக் கூத்தாகவே இருக்கும் என்பதனால் தனித்து போட்டியிட முடிவு செய்தோம்.

**மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டதன் அடிப்படையிலோ அல்லது அப்பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியதென்ற அடிப்படையிலோ ஐ.தே.க.கட்சியினருக்கும் சி.ல.சு.கட்சியினருக்கும் இடையில் நீங்கள் காணும் வேறுபாடு என்ன?**

இவ்விரு பேரினவாதக் கட்சிகளுமே மலையக மக்களின் பிரச்சினைகளை சரியாக இனங்காணவில்லை என்றே நாம் கருதுகிறோம். அதனால் இவர்கள் பல சந்தர்ப்பங்களில் இனவாத ரீதியாகவும் பாரபட்சமாகவுமே மலையக மக்களை நடாத்தியுள்ளனர். இதற்கு ஏராளமான உதாரணங்களை காட்ட முடியும்.

மலையக மக்களுக்கென ஒரு அரசியல் அமைப்பு சரியான அரசியல் கோரிக்கைகளுடன் உருவாகவில்லை என நாம் நமது ஸ்தாபனத்தை உருவாக்கும் போதே கூறினோம். ஆகவே தான் மலையக மக்களுக்கென ஒரு சரியான அரசியல் தலைமையை உருவாக்கி அதனூடாக அவர்களின் பிரச்சினைகளை அரசியல் விவகாரமாக்க முயற்சிக்கிறோம். இதனை அனைத்து அரசியற் கட்சிகளிடமும் வலியுறுத்தி அவர்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வருவதனை நமது கடமையாகவும் திட்டமாகவும் கருதுகிறோம்.

**தொழிற்சங்கமாக அன்றி அரசியற் கட்சியாகவே முகிழ்ந்து அரசியற் கட்சியாகவே வளர்ச்சி பெறும் நீங்கள் இத்தேர்தலில் ஐ.தே.க.வை தோற்கடிப்பது இன்றைய அரசியலில் இன்றியமையாத ஒரு தேவை எனப் பலர் கருதுவது தொடர்பாக என்ன சொல்கிறீர்கள்?**

மேலெழுந்தவாரியான சிந்தனையின் அடிப்படையிலன்றி கடந்த 17 வருடகால ஐ.தே.கவின் ஆட்சியின் பெறுபேறுகளினூடாக அக்கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்பதில் தெளிவாகவே உள்ளோம். அது ஒரு தேசிய அரசியல் கடமையும் கூட.

ஆனால் பிராந்தியரீதியில் மலையகமக்களின் ஏகப்பிரதிநிதிகள் நாமே எனக் கூறி மலையகத்தின் தனித்துவத்தை தாரை வார்த்துக் கொடுக்கும் இ.தொ.காவின் சவால்களுக்கும் இன்று நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே தான் நாம் சொல்கிறோம். தேசிய அரசியற் தேவை கருதி பொதுஜன முன்னணியை ஆதரிக்க வேண்டி இருந்தாலும் கூட மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்நிபந்தனையாக்கியே அதனை மேற்கொள்ள முடியும். காலம் காலமாக தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் நமது மக்களின் பிரச்சினைகளை இரண்டாவது கட்டத்திற்கு தள்ளி வைத்து விட்டு தேசிய அரசியற் தேவையை முதன்மைப்படுத்த நாம் தயாரில்லை.

**பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வரும்பட்சத்தில் தொண்டாவின் இ.தொ.க, மலையகத்தில் பலமான எதிர்கட்சி என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுவிடும். அதேவேளை பொ.ஜ.முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடாத்துமளவுக்கு சுமூகமான உறவைக் கொண்டவர்களாக நீங்கள் இருப்பீர்கள். இந்நிலையில் மலையக மக்கள் தொடர்பாக பொது ஜன முன்னணியுடனான உங்கள் உறவு நிலை எவ்வாறு அமையும்?**


எம்மைப் பொறுத்தவரையில், இதில் பொ.ஜ. முன்னணியின் பங்குதான் அதிகமாகவுள்ளது எனக் கூறமுடியும். ஏனெனில் எதிரணியில் இருக்கும் போதே நாம் தம்முடன் கொண்டிருந்த அரசியல் உறவைக் கருத்திற் கொண்டு அரசியல் நேர்மையுடன் செயற்பட ஆரம்பித்தால் நல்லுறவை எற்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலுவோம். மாறாக தமது அரசியல் இலாபத்தின் அடிப்படையில் பலத்தினை நோக்கமாகக் கொண்டு தொண்டமானை தம்பக்கம் இழுப்பதற்கு என்ன விலை கொடுக்கலாம் என இவர்கள் நினைப்பார்களாயின் முழுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்குவதோடு அம்பலப்படுத்தவும் தயங்கமாட்டோம். இந்நிலையில் எமது அரசியற் கோரிக்கைகள் இவர்களிடம் செல்லுபடியாகாது. ஏனெனில் தொண்டா எம்மை விட அரசியல்ரீதியில் அவர்களுக்கு பல இலாபத்தைக் கொடுக்கலாம். தொண்டாவை திருப்திப்படுத்த மலையக மக்களுக்கு என்ன கொடுக்கலாம் என்பதை விட தொண்டாவுக்கும் இ.தொ.கவுக்கும் என்ன கொடுத்தால் அவர்கள் திருப்திப்படுவார்கள் என்பதிலயே பொ.ஜ.முன்னணி அக்கறை காட்டும். தொண்டாவும் ஐ.தே.கவில் கிடைத்த அதே அந்தஸ்து பொ.ஜ.முன்னணியுடமும் கிடைக்குமா என்பதிலேயே கருத்தாய் இருப்பார்.

**மலையக மக்கள் மத்தியில் பொ.ஜ.முன்னணியுடன் சேர்ந்து போட்டியிடுவதற்கும் தனித்துப் போட்டியிடுவதற்கும் இடையில் வேறுபாடு நிலவும் எனக் கருதுகிறீர்களா?**

நிச்சயமாகவே வேறுபாடு இருக்கும் எனக் கருகிறேன். ஏனெனில் பொ.ஜ.முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் போது அது சி.ல.சு. கட்சியுடன் இணைந்து போட்டியிடுகிறோம் என்ற பார்வையிலேயே மக்களுக்கு ஏற்படுத்தும். இது மக்களின் மனோநிலையில் அதிருப்தியை ஏற்படுத்தும், காரணம் சி.ல.சு.கட்சி என்பது மலையக மக்களின் விரோதி எனவும் பஞ்சத்தை உண்டு பண்ணும் கட்சி எனவும் கடந்த 17 வருட காலமாக இ.தொ.க மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்நிலையில் அவர்களுடன் இணைந்து போட்டியிடுவதானால் முதலில் சி.ல.சு.கட்சியை ஏற்றுக் கொள்ளும்படி கூற வேண்டும். அதன்பின்பே நமக்கு வாக்களிக்கும்படி கேட்க வேண்டும் நாம் தனியே போட்டியிடுவோமேயானால் இப்பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை. எனினும் இவ்வாறான அபாயத்தை எதிர்கொள்ள வேண்டி இருந்தும் பொ.ஜ.முன்னணியுடன் நாம் இணைந்து கேட்க முற்பட்டதற்கு காரணம் தேசிய அரசியலில் நாம் கொண்ட நாட்டமேயாகும்.

***நேர்காணல் ஒழுங்கு செய்திருந்த மலையக மக்கள் முன்னணி பி.ஏ.காதர் அவர்கள் தேர்தல் தொடர்பான கேள்விகளை மட்டுமே கேட்குமாறு கோரியிருந்ததால் சரிநிகர் பிற கேள்விகளைத் தவிர்த்திருந்தது.***

# அஷ்ரஃப் பஷீர் ஹிஸ்புல்லாஹ் நடந்த மாயம் என்ன?



பொதுத்தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்ற இவ்வேளைகளிலேயே தேர்தல் நாடகத்தில் பங்குபற்றும் முஸ்லீம் காங்கிரஸ் கலைஞர்களுக்கிடையே தற்போது ஒரு பிரச்சினை எழுந்துள்ளது. அதுதான் அண்மையில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸில் சேர்ந்த ''ஈரோஸ் பஸீர் சேகுதாவூத் சம்பந்தப்பட்ட சிக்கல்களாகும்.

இவரின் உள் வருகையானது தானே தனிக்காட்டு ராஜாவாக இருந்தவரான ஹிஸ்புல்லாஹ் விற்கு பெரும் சங்கடமான நிலைமையை தோற்றுவித்துள்ளது. ஹிஸ்புல்லாஹ் (முன்னாள் மட்டு எம்.பி) ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசியல் அதியுயர் பீடத்திற்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எவரும் வருவதை விரும்பாதவராக காணப்பட்டார். இவரின் நடவடிக்கைகளால் அதிருப்தியுற்ற எழுத்தாளரும் கலைக்கப்பட்ட வட,கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான எஸ்.எல்.எம்.ஹனிபா முஸ்லீம் காங்கிரஸிருந்து பிரியாவிடை பெற்றார். அன்று ஹனிபாவின் வெளியேற்றம் தலைவருக்கு சாதாரணமாக தோன்றியது. ஆனால் இன்று தலைவர் பகிரங்கமாக மன்னிப்பு கோருகிறார்.

ஈரோஸ், பஸீரின் வருகையைப் பாராட்டி முஸ்லீம் காங்கிரஸ் தலைவர், அஷ்ரப் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் பஸீர் ஒரு முஸ்லீம்களின் சேனைத்தளபதியாகவும், இமயமலையில் முஸ்லீம்களுக்காக வெற்றிக் கொடி நாட்டியவர் போலும் எழுதியுள்ள முறையானது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர்களிடையே அதிருப்தியை உண்டாக்கியுள்ளது.

ஆனால் பஸீர் சேகுதாவூத் அவர்களின் வருகையானது ஈரோஸில் இருக்கும் போது தமிழர்களுக்கு ஈழத்தை பெற்றுக் கொடுத்தவிட்டு தற்போது முஸ்லீம் காங்கிரஸில் சேர்ந்து முஸ்லீம் மக்களுக்கு தனி முஸ்லீம் மாகாண சபை ஒன்றைப் பெற்றுக் கொடுக்க வந்திருப்பதாகவே முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எண்ணுகிறார் போலும். கைகொட்டிச் சிரிப்பார்கள் ஊரார் உதைப்பார்கள்.

கடந்த பிரதேச சபைத் தேர்தலின் போது ஈரோஸ் பஸீர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக பிரச்சார வேலைகளில் ஈடுபட்டதை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்கள் அறிவார்கள். பஸீர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேராததை பலர் பல்வேறுவிதமாகவும் கூறுகின்றார்கள். ஆளுங்கட்சியினர் கருத்துப்படி பஸீரைப் பற்றி மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் குற்றப்புலனாய்வினரின் அறிக்கை மோசமானது என்பதால் ஐ.தே.க.சேர்க்கவில்லை என்பது. மாற்றாக பஸீரின் ஆதரவாளர்களின் கருத்தானது கல்வி இராஜாங்க அமைச்சர் பதவியை கேட்டு வாதாடி அதை அரசாங்கம் தர மறுத்ததாலேயே கட்சியில் சேரவில்லை என்பது. இன்னும் தமிழ் தரப்பு அரசியல்வாதி ஒருவர் ஈரோஸ் முதல்வர் பாலகுமார் யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சமூட்டி எழுதிய கடிதமே பஸீர் ஆளுங்கட்சியில் சேராமைக்கு காரணம் என்றார். அது எப்படியோ ஒரேயொரு உண்மை; பஸீர் ஆளுங்கட்சியில் இல்லை. இப்போது மு.காங்கிரஸில் என்பதே.

பஸீர் சேகுதாவூத் முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லா முஸ்லீம் இடங்களிலும் செல்வாக்கை பெறமாட்டார். ஏனெனில் உதாரணத்திற்கு ஒன்றை நோக்கினால் ஓட்டமாவடி பிரதேச கம் உதாவ திட்டத்தின் கீழ் காவத்தமுனையில் அமைக்கப்பட்டுள்ள 50 வீடுகளில் கூடுதலான வீடுகள் ஓட்டமாவடியில் இருக்கின்ற சில வசதிபடைத்தவர்களே பெற்றிருக்கின்றனர். அதை இன்னும் பரிசுத்தமாக சொன்னால் இவரின் ஓட்டமாவடி பிரத்தியேக செயலாளரின் குடும்பத்தவர்களே பெற்றிருக்கின்றனர். இது தற்போது விசாரணையில் இருக்கின்றது. இந்த திட்டத்திற்கு பொறுப்பாக அரசாங்கம் பஸீரை நியமித்தது. அவர் ஆளுங்கட்சிக்கு சார்பானவராக இருந்ததனால் ஆகும்.

## ஓட்டமாவடி எம்.எச்.எம்.நௌபல்

அடுத்தவர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் நிலைமையானது கட்சிக்குள் செல்வாக்கு அற்றவராகவே இருக்கின்றார். ஏனென்றால் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் வெளிநாடுகளுக்கு செல்லும் போது பாராளுமன்றத்தில் முஸ்லீம் காங்கிரஸ் பதில் தலைவராக ஹிஸ்புல்லாஹ்வையே நியமிப்பது வழக்கம். ஆனால் இம்முறை தலைவர் இராஜினாமா செய்தபோது பாராளுமன்ற குழுக்களின் தலைவராக அபூபக்கர் அவர்களை அஷ்ரப் தெரிவு செய்திருந்தார். இச்செயலானது ஹிஸ்புல்லாஹ்விற்கு பிடிக்கவில்லை. இதுமட்டுமல்லாமல் இம்முறை ஹிஸ்புல்லாவின் சொந்த ஊரிலேயே வேட்பாளராக சட்டத்தரணி ஜவாட் அவர்களை முஸ்லீம் காங்கிரஸ் தன்னுடைய கட்சியின் வேட்பாளராக ஹிஸ்புல்லாஹ்வுடன் சேர்ந்து போட்டியிட தெரிவு செய்தது இன்னும் ஹிஸ்புல்லாஹ்விற்கு ஆத்திரத்தை ஊட்டியது.

கடந்த பிரதேச சபைத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று, கோறளை மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபைகளில் தோல்வியடைந்தமைக்கு ஹிஸ்புல்லாஹ்தான் காரணம் என்று தலைவர் அஷ்ரஃப் பகிரங்கமாக கூறினார். ஆனால் உண்மை அதுவல்ல. இதயசுத்தியோடு சிந்தித்தால் தலைவரே காரணமாகும். எம்.எச்.எம்.அஷ்ரஃப் கல்முனையை பிறப்பிடமாக கொண்டவர். இவர் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல கூடவே வெகுஜன இஸ்லாமிய தலைமைத்துவத்தின் உதவிச் செயலாளரும், ஆசிய பிராந்திய பிரதிநிதியுமான இவர் கடந்த பிரதேச சபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது தன்னுடைய கட்சியில் இருந்து கொள்கை வேறுபாட்டால் பிரிந்து சென்றவர்களையும் குறிப்பாக ஏறாவூர் தற்போதைய பிரதேச சபை தவிசாளர் அலிஸாஹிர் மௌலானா அவருடைய குடும்பத்தையும் பற்றி மிகமோசமான வார்த்தைப் பிரயோகம் செய்தமை ஒரு காரணம். மற்றையது தாங்கள் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து விட்டோம் என்ற கருத்தையும் மக்களிடம் விளங்கப்படுத்தவில்லை. இவை இரண்டும் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும்.

தற்போது அஷ்ரஃப் வாக்கு பொறுக்கியாக மாறியுள்ளார். ஏனெனில் கடந்த வருடம் ஓட்டமாவடியில் இடம்பெற்ற புலிகளின் கண்ணி வெடியில் சிக்குண்ட மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர்களின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவராத தலைவர் சென்றமாதம் வாழைச்சேனையில் பொலிஸ் - பொதுமக்கள் மோதலில் மரணமடைந்த மாணவனின் மரணச் சடங்கிற்கு அன்றிரவே வந்ததன் மாயம் என்னவென்று பொதுமக்கள் அறியமாட்டார்களா? எனவே இவ்வளவு காலமும் ஆளுங்கட்சியின் ஆடம்பரத்தில் மூழ்கியிருந்த அஷ்ரஃப் இப்போது தான் வெளியில் வந்து எதிரணியுடன் சேர்ந்திருக்கிறார்.

அஷ்ரஃப் முஸ்லீம் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுப்பாரா? அல்லது வென்றவர்களுடன் ஒட்டிக் கொண்டு பழையபடி பதவி சுகத்தில் மூழ்கித் திளைப்பாரா?

---

# மண்டையில் போடு! மன்னிக்கவும் புள்ளடி போடு!!

மைதிலி

சிறிலங்காப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து கிழக்கின் மட்டக்களப்பில் தமிழ் இயக்கங்களும், கூட்டணியும் பேரினவாதக் கட்சிகளின் ஒட்டுண்ணிகளும், முஸ்லீம் காங்கிரஸும் நாக்கைத் தொங்கப் போட்டபடி நாயாய் அலைந்து கொண்டிருக்கின்றன.

இவர்களுக்கெல்லாம் இன்று தேவைப்படுவது தமிழ்பேசும் மக்களின் விடுதலையோ விமோசனமோ அல்ல. சிறிலங்காப் பாராளுமன்றத்தின் கதிரைகளும், பஜீரோக்களும் தான். அதற்காக இவர்கள் எதையும் செய்யத் தயாரான நிலையிலேயே இருக்கிறார்கள்.

மட்டக்களப்பில் ஐந்து பாராளுமன்றக் கதிரைகளுக்காக 64 பேர் போட்டியிடுகிறார்கள். இவர்களோ பதவிக்காக ஒருத்தரையொருவர் எவ்வாறு பழிவாங்கலாம் என்ற வெறியிலேயே உள்ளார்கள்.

கூட்டணி, ஐ.தே.க, பொ.ஜ.முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ, ஈரோஸ் கூட்டு, முஸ்லீம் காங்கிரஸ் முன்னைய ஐ.தே.க உறுப்பினர் சர்ரங்கபாணி தலைமையிலான சுயேட்சைக்குழு, ஈ.என்.டி.எல்.எப் காளிதாஸ் தலைமையிலான ஒரு சுயேட்சைக்குழு என்பன களத்தில் இறங்கியுள்ளன.

இதையும் விட மட்டக்களப்பில் கற்கள் தோண்டியெடுக்கப்பட்ட தலையில்லா முண்டங்களாய் பிணங்கள் கிடந்த சம்பவங்களின் பின்னணியில் சந்தேகிக்கப்பட்டவரான கப்டன் முனாசின் வலதுகரம் புளொட் மோகனின் அனுசரணையுடன் ஒரு சுயேட்சைக் குழுவும் களத்தில் இறங்கவிருந்தது. கடைசி நேரத்தில் அது கைகூடாமல் போய்விட்டது.

''நாம் போட்டியிடுவதனூடாக தமிழ் வாக்குகள் பிரிவடைந்து தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமற் போய்விடும் என்பதால் யாழ்ப்பாணத்தைத் தவிர மற்றைய இடங்களில் போட்டியிடவில்லை'' என அறிவித்திருக்கிறது ஈ.பி.டி.பி. ஆனால் கிழக்கில் தேர்தலுக்காக இடும் முதலை விட கிடைக்கும் இலாபம் குறைவாக இருக்குமென்பதை உணர்ந்து கொண்டே ஈ.பி.டி.பி கிழக்கில் போட்டியிடாமல் ஒதுங்கியுள்ளது என்பதும் இது தான் அவர்களுடைய 'பெருமனது' என்பதும் வெள்ளிடைமலை.

தேர்தல் பிரச்சார வேலைகள் மட்டக்களப்பில் அமளிதுமளி பறக்கிறது. ஆமியின் சென்றியில் நின்றவர்களும், டயர் போட்டவர்களும் கப்பம் வாங்கியவர்களும், இந்தியன் ஆமியர் காலத்தில் கண்ட முகங்களும் பழைய கிழட்டு முகங்களும் மாலையும் கையுமாக மக்களை தேடி வீடுவீடாகச் செல்ல இங்குள்ள மக்களுக்கோ பெரும் அதிசயமாக இருக்கிறது. அடேய்.... மகனே என்று சொன்ன வாய்கள் ஐயா என்கின்றன. அடிக்க எழுந்த கைகள் இப்போ கூப்பி நிற்கின்றன. இதையும் விட அதிசயம் இந்த உலகத்தில் வேறென்னதான் இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற இடத்தில் ரெலோக்காரர் ஜனா (கருணாகரம் எம்.பி) அண்ணைக்கு மண்டையில போடுங்க என்றனராம். வீட்டுக்காரருக்கோ குழம்பமாகவிருந்ததாம். பக்கத்தில் நின்ற மற்றவர் சிரித்துக் கொண்டே சொறி புள்ளடி போடுங்க என்றாராம். 'நாயைக் கழுவி நடுவீட்டில் வைத்தாலும் குணம் மாறுமோ' என்று கேட்டால் தப்பாமோ?

தனக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கு மட்டும் விடைபெற்று கனடா சென்ற கோ.கருணாகரம் எம்.பி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலில் அறிவிக்கப்பட்டதும் திடீரென மட்டக்களப்பில் வந்து இறங்கியது இங்குள்ள பலருக்கு மட்டுமன்றி ரெலோ முக்கியஸ்தர்களுக்கே பெரும் அதிர்ச்சியாகவிருந்துள்ளது. கருணாகரம் எம்.பி.கனடாவில் இருந்து இனி இலங்கை திரும்பமாட்டாரெனத் தான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அவரும் அந்த நோக்கத்தோடு தான் கனடா சென்றதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதைவிட முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் கிராமங்களில் இந்தியன் ஆமி இருந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்வும் ரெலோவும் சொன்னமாதிரி மட்டக்களப்பில் இரண்டு முஸ்லீம் எம்பிக்களையாவது எடுக்க வேண்டும் வேறு எந்தக் கட்சிக்கும் வாக்களிக்காமல் இஸ்லாத்தின் மீதும் அல்லாவின் மீது நம்பிக்கை கொண்டு முஸ்லீம்களே இஸ்லாம் என்கிற கயிற்றைப் பற்றிப் பிடியுங்

→7

# ஜே.வி.பியின் மீள்வருகை



## அஞ்சுவது யார்?

"ஐ.தே.கவும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் தத்தங்கள் விஞ்ஞாபனங்களை களவெடுத்து விட்டதாக ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டுகின்றனர். அப்படியானால் இரு சாராரதும் நோக்கம் ஒன்றுதான் என்பது தெளிவு. நாங்கள் அவர்களுக்கு சவால் விடுகிறோம் முடிந்தால் எங்களது விஞ்ஞாபனத்தை திருடட்டும். இதில் உள்ள ஒரு அம்சத்தைத் தானும் அவர்களால் நடைமுறைப்படுத்த முடியாது. ஏனெனில் எங்களது கொள்கைகள் மக்கள் நலன் சார்ந்தது முதலாளித்துவ ஏகாதிபத்திய நலனைச் சார்ந்ததல்ல"

இவ்வாறு ஜூலை 14ம் திகதி நுகேகொடையில் நடந்த ஜே.வி.பியின் கூட்டத்தில் ஆரிய புலேகொட உரையாற்றியிருந்தார்.


மேற்படி கூட்டத்திற்கு 10,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள். இக்கூட்டம் நடத்தப்பட்ட 14ஆம் திகதியானது ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் றோகண விஜேவீரவின் 51ஆவது பிறந்த தினமாகும். அதனை முன்னிட்டு கூட்டத்தின் தொடக்கத்தில் மேடையில் அவரது படம் திரைநீக்கம் செய்யப்பட்ட போது பலத்த கரகோஷம் எழுந்தது. மத்தியானம் 3.00 மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் இரவு 9.00 மணிவரை நடந்தது. பலத்த மழையின் மத்தியிலும் நனைந்து கொண்டு உடை உடலோடு ஒட்ட நடுங்கிய உடலையும் பிடிவாதத்துடன் இறுக்கிக் கொண்டு நின்றிருந்தனர் மக்கள்.

இக்கூட்டத்தில் லண்டனிலிருந்து ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவங்ச அமரசிங்கவினால் அனுப்பப்பட்ட 14 பக்கங்களைக் கொண்ட கடிதம் வாசிக்கப்பட்டது. அத்துடன் ஜே.வி.பியின் அரசியற் கொள்கையும் வாசிக்கப்பட்டது. இவ்வரசியற் கொள்கையை ஏற்றுக் கொள்வதாக கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் அதிகமானோர் கையுயர்த்தி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இம்முறை பொதுத்தேர்தலில் ஜே.வி.பி, இலங்கை முற்போக்கு முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய 19 மாவட்டங்களில் 242 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தேசத்தை மீட்கும் முன்னணி (National Salvation Front) எனும் பெயரில் போட்டியிட தேர்தல் ஆணையாளர் அனுமதி கொடுக்க மறுத்த காரணத்தினால் இறுதி நேரத்தில் இலங்கை முற்போக்கு முன்னணி எனும் பெயரில் போட்டியிடத் தீர்மானித்ததாக அதன் அமைப்பாளர் தெரிவித்திருந்தார். தேர்தலில் இலங்கை முற்போக்கு முன்னணி எனும் பெயரில் போட்டியிட்டாலும் தேசத்தை மீட்கும் முன்னணி எனும் பெயரே பரவலாக பாவிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பெயர்கள் பாவிக்கப்பட்டு வருகின்ற போதும் இது முழுமையாக ஜே.வி.பியினரைக் கொண்ட அமைப்பாகவே இயங்கி வருகிறது.

இ.மு.மு.சார்பில் போட்டியிடும் 242 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் பதுளை மாவட்டத்தில் சுப்பையா ரட்னசபாபதி எனும் தமிழர் ஒருவரும், திருகோணமலையில் ஒருவரும் களுத்துறையில் ஒருவருமாகப் இரு முஸ்லீம்களும் போட்டியிடுகின்றனர்.



கம்பஹா ஜே.வி.பி தலைவர் அஜித் குமார



ஜே.வி.பி தேர்தல் மேடை ←

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட இறுதி நாளான ஜூலை 11ஆம் திகதியன்று 10 நிமிட கால தாமதமாக இ.மு.முவின் தேசியப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதனால் அது நிராகரிக்கப்பட்டது. இத்தேர்தலில் தேசியப்பட்டியல் நிராகரிக்கப்பட்ட ஒரேயொரு கட்சி இலங்கை முற்போக்கு முன்னணியே.

தற்போது லண்டனிலிருக்கும் ஜே.வி.பி தலைவர் சோமவங்ச அமரசிங்க ஜே.வி.பியின் மத்திய குழுவில் கொலை செய்யப்படாமல் எஞ்சியிருக்கும் ஒரேயொரு நபராவார். லண்டனிலிருக்கும் ஜே.வி.பியின் தலைமைக் காரியாலயத்துடன் சோமவங்ச முரண்பட்டிருக்கின்ற போதும் இலங்கையிலிருக்கின்ற ஜே.வி.பியின் பெரும்பாலானோர் சோமவங்சவை தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த நம்பிக்கையிலேயே அவர் ஜே.வி.பியைப் பொதுத் தேர்தலில் போட்டியிடச் செய்தார் எனத் தெரிகிறது. மீண்டும் ஜே.வி.பி வரும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் இருந்த போதும் தேர்தல் அரசியலில் மீண்டும் இறங்கும் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பாராளுமன்ற அரசியலில் இறங்குவதற்கான காரணத்தை ஜே.வி.பி அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவரிடம் வினவிய போது அதற்கு அவர் "மீண்டும் தலை தூக்க இடமளிக்க முடியாத வகையில் 'ஜே.வி.பி' எனக் கூறி பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டும் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியும், ஜே.வி.பி என்றால் கொலைஞர்கள் என்ற முத்திரையையும் கிளப்பி விட்டுள்ள சூழ்நிலையில் மக்களுக்கு உண்மையைக் கூறவும் தொடர்ந்து எங்கள் இலக்குக்காக வேலை செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. அதற்கு நாங்கள் பகிரங்க அரசியலை பயன்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. எங்களை அடுத்த கட்டத்துக்கு சூழல் தூண்டும் வரை இதனை பயன்படுத்துவோம்" என்றார்.

இம்முறைத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குள் சகல இடதுசாரிக் கட்சிகளும் இணைந்துள்ள நிலையில் இடதுசாரி சிந்தனை கொண்டோரின் வாக்குகள் அனைத்தும் பொது முன்னணிக்கே கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் ஜே.வி.பியின் வருகை பொது முன்னணிக்கு கிடைக்கவிருந்த இடதுசாரிகளது வாக்கை பிரித்துவிடும் என அஞ்சப்படுகிறது.

இக்காரணத்தினால் பொது முன்னணியும் அதைச் சார்ந்த கட்சிகளும் பத்திரிகைகளும் "ஜே.வி.பியின் வருகை ஐ.தே.க வின் சதி' என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் அண்மையில் மறுப்பு தெரிவித்திருந்தார். "நாங்கள் ஐ.தே.கவின் வால்களாக இருந்தால் இன்னும் எங்கள் தலைவர்களும், எங்கள் ஏனைய தோழர்களும் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டிய அவசியமில்லை. சிறையில் பல ஆண்டுகளைக் கழிக்க வேண்டியதில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கு கூட மக்கள் பணத்தை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது" என ஜே.வி.பி மறுத்திருக்கிறது.

**என்.எஸ்.கே**

## அஷ்ரஃப்....

கள் மரத்துக்கு வாக்களியுங்கள் என பிரச்சாரம் செய்கிறது.

மற்றோர்புறம் ஐ.தே.க மட்டக்களப்பு வாக்காளர் பட்டியலில் பொலிஸ் இராணுவத்தினரையும் சேர்த்து பதிந்துள்ளதாகவும் தெரியவருகிறது. எப்பாடுபட்டாவது மட்டக்களப்பில் ஐ.தே.கவை வெற்றி பெறச் செய்யும்படி மட்டக்களப்பு நகர ஐ.தே.க அமைப்பாளரும் மாநகரசபை உறுப்பினருமான பத்மநாதனுக்கு ஐ.தே.கவின் தலைமை கட்டளையிட்டுள்ளதாகவும் இவருக்கு நேரடியாக பொலிஸ் இராணுவத்துடன் தொடர்பு கொண்டு தேவையான வசதிகளைப் பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. முன்னையத் தேர்தல்களில் தேர்தலுக்கு ஒதுக்கிய நிதியில் மோசடியில் ஈடுபட்டதற்காக ஒதுக்கப்பட்ட ரிஸ்வி சின்னலெப்பை இந்த முறை முற்றாகவே ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தேர்தல் சூடு. ஒருத்தருக்கொருத்தர் பற்றியெரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒவ்வொரு கட்சியும் ஒன்றை ஒன்று வஞ்சித்து வெளுத்து வாங்குகின்றன. ரெலோவை காட்டிக் கொடுப்பவர்கள் டயர் போட்டவர்கள் என்றும், ஈ.பி.ஆர்.எல்.எப் இந்தியன் கொடுத்த காசில் தான் தேர்தலுக்கு செலவழிக்கிறது என்றும், கூட்டணி இந்தப் போராட்டத்தையே முதலில் காட்டிக் கொடுத்த துரோகிகள் என்றும் அனல் கலந்த வார்த்தைகள் பறக்கின்றன. இப்போதாவது உண்மைகளை சொல்வதற்கெனினும் இந்த தேர்தல் பிரயோசனப்பட்டால் போதும்.

மக்களைப்பற்றியும் உண்மைகளைப்பற்றியும் இவர்களுக்கேன் கவலை? தேவை பஜீரோவும் கதிரையும் சிராவஸ்தியில் தங்குவதற்கு இடமும் மட்டுமல்லவா?

அதுசரி, எம்.பீமாருக்கு பஜீரோக்கள் வாங்க 'பெமிற்' தரப்போவதில்லை என்று ஐ.தே.க வேறு அறிவித்து விட்டதே? என்ன செய்யப் போகிறார்கள் இவர்கள்?

## கதிரை....:


கும் போதே இவர்கள் கொன்றொழித்த சர்வதோயம் கதிரமலையிலிருந்து தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை நெப்போலியன் வரை ஞாபகத்துக்கு வருகிறார்கள். அருமையானதொரு கூட்டு முன்னணியில் இணைவதற்கு தகுதியானவர்கள்.

அடுத்து தீவுப்குதியில் சுதந்திரமான தேர்தலை நடாத்த ஈ.பி.டி.பியினர் அனுமதிக்கிறார்கள் இல்லை. தம்மை மிரட்டுகிறார்கள் எனக் குமுறுகிறார்கள் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர். ஈ.பி.டி.பி.யினரின் ஜனநாயகப் பாதையின் அகலம் அவ்வளவுதான். நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் என்ன செய்தார்கள்? யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகாமையில் 1000 ரூபாவுக்கு மேல் பணத்துடன் செல்பவர்களைப் பிடித்து பணத்தைப் பறித்தெடுத்தவர்கள் இவர்கள். 'காரணம் பணத்துடன் போய் வேட்பு மனுத் தாக்கல் செய்து விடுவார்களோ என்ற பயம். ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் நின்று இலக்கங்களைக் கொடுத்து இவற்றுக்கே புள்ளடி போடுங்கள் என்று மிரட்டியவர்கள் தான் இவர்கள். ஆனால் இப்போது தேர்தலில் குதித்ததுடன் தேர்தல் ஜனநாயகம் பற்றியும் பேசுகிறார்கள். என்ன செய்வது? இவர்களின் பாசறையில் வளர்ந்தவர்கள் தானே இன்றைய ஈ.பி.டி.பியினர். ஈ.பி.ஆர்.எல்.எப்பினரது பாதையைவிட ஈ.பி.டி.பியினரது பாதை எப்படி அகலமாயிருக்கும்?

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப்புக்குச் சொல்லுமோ என்னவோ?

# ஐ.தே.க.குண்டர்படை கலைஞர்கள் மீது தாக்குதல்






கடந்த 12ம் திகதி மாலை குருகெதர மண்டபத்தில் விடுத லைக் கலைஞர்கள் ஒன்றியம் ஒன்றை நிறுவுவது தொடர்பாகச் சிங்கள கலைஞர்களின் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந் தது. கூட்டத்திற்கு வசந்த ஒபயசே கர, பிரதீபா தர்மதாஸ, ரோகண வீரசிங்க, ஜயசிறி சந்திரஜித், ஜய சிறி, சுனில் ஆரியரத்ன, நந்தாமா லினி, சுகதபால டிசில்வா, கார்லோ பொன்சேகா, புத்ததாச கலப்பத்தி, தர்மசிறி பண்டாரநாயக்கா, குண தாஸ கபுயே, டக்ளஸ் சிறிவர்த்தன ஆகிய சிறந்த கலைஞர்கள் உட்பட 63 பேர் சமுகமளித்திருந்தனர். கூட் டம் நடந்து கொண்டிருந்த வேளை மண்டபத்திற்குள் நுழைந்த ஐந்து பேர் துண்டுப் பிரசுரங்களை விநி யோகிக்க ஆரம்பித்தனர். அத்துண் டுப் பிரசுரங்களில், கூட்டத்தில் பங் கெடுத்துக் கொண்டிருந்த கலைஞர் கள் மீது கொலைக் குற்றச் சாட்டுக் கள், ஊழல் மற்றும் அவதூறுக ளும், பொய்ப்பிரச்சாரங்களும், இடம் பெற்றிருந்தன. கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்த கலைஞர்கள், மண்டபத்தினுள் துண்டுப் பிரசுரம் விநியோகிக்க வேண்டாம் என்று தடுக்கவே துண்டுப் பிரசுரம் விநி யோகித்த குழுவுடன் இருந்த ஒரு வர், கைகுண்டையும் இன்னொரு வர் கைத்துப்பாக்கியையும் வெளியே எடுத்துப் பயமுறுத்தி னர். உஷார் அடைந்த கலைஞர்கள் கூட்டம் அவர்களை மடக்கிப் பிடிக்க முயற்சித்தது. அவர்கள் தப் பித்துப் போக மூவர் பிடிபட்டனர். பிடிபட்ட மூவர்களிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் பல பயங்கரமான உண்மைகளை வெளியே கொண்டு வந்துள்ளது.

அண்மையில் ஐ.தே.கட்சியில் சேர்ந்த ராஜித்த செனவிரத்தினவா லேயே இந்த குண்டர்படை அனுப் பப்பட்டுள்ளதாக பிடிபட்டவர்கள் மூலம் தெரியவந்துள்ளது. இந்த ராஜித்த ஜே.வி.பி பிரச்சினைக் காலங்களில் அரசாங்க உளவுப் படைகளுடன் சேர்ந்து இயங்கியவர் எனக் கூறப்படுகிறது. அப்பொ ழுது, ஒசியன் மக்கள் கட்சியில் இருந்தவர் இவர். பொலநறுவை யில் நடைபெற்ற விவசாயிகளின் படுகொலை தொடர்பான பிரச்சி னைகளை ஆராய்வதற்காக, ஜனா திபதியால் விசேடமாக அனுப்பப் பட்டவர். பிடிபட்ட இவர்களிடமி ருந்து பெறப்பட்ட, இவர்களது தனிப்பட்ட விபரங்களாவன: கொந்த முனி, சாந்த கலும் மென் டிஸ், என்பவர் 15B ஜாதிக்க நிவா சய, சிறிதம்ப மாவத்த, கொழும்பு -10இல் வசிப்பவர். இவரது அடை யாள அட்டை இல 650052625 V இத்துடன் ஐ.தே.க அங்கத்துவ அட் டையும் இருந்தது. அதன் இல 162761. இவர் முன்பு விசேட அதி ரடிப்படை (STF) யாக இருந்து ஆயு தத்துடன் தப்பியோடியவர் என வும், பல கொள்ளை கொலைகளு டன் தொடர்புள்ளவரெனவும் அறி யக் கிடக்கின்றது. மற்றவர் திரா விட கழக இளஞ்செழியன். இவர் 871-45 மருதானை வீதி- கொழும்பு -10 இல் வசிக்கின்றார். இவரது அடையாள அட்டை இல 66178408. பிரதேச சபைத் தேர்தல் களின் போது நவசமசமாஜக் கட்சி யின் சார்பில் போட்டியிட்டவர் இளஞ்செழியன்.

மேலும் நாட்டின் உயர் பாதுகாப்பு அதிகாரிகளின் படங்களும் Visiting cards ம் இருந்தன. அவையாவன இலஞ்ச ஊழல் பொலிஸ் அதிகாரி ஆனந்த ஜெயசேன, ஐ.தே.கட்சி யில் இருந்தவரும் சுச்சரித்த தலை வர்களிலும் ஒருவரான வனவி லங்கு பாதுகாப்பு அதிகாரி விஜித கதிரகோன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஆனந்தன், இழஞ்ச ஊழல் பொலிஸ் O.I.C பொரல்ல பொலிஸ் O.I.C, பிரதி பொலிஸ் மா அதிபர் (குற்றப்பி ரிவு), பொலிஸ் அதிகாரி டக்ளஸ் பீரிஸ், தெமட்டகொட பொலிஸ் O.I.C பொலிஸ் விசேட அதிரடிப் படை அணி அதிகாரி தயா ஜயசுந் தர, இரகசிய பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி கேமச்சந்திர ஆகியோரி னதும், மற்றும் பலரினதும் காணப் பட்டன.

கலைஞர்கள் பிடிபட்ட மூவரையும் கொள்ளுப்பிட்டி பொலிஸில் ஒப்ப டைத்தனர். அவர்கள் மீது அமைதி பாக நடைபெற்ற கூட்டத்தை குழப் பியது, கலைஞர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் செய்தமை, அவதூறு துண்டுப்பிரசுரங்களை விநியோ கித்தமை ஆகிய குற்றச் சாட்டுக் களை வைத்தனர். ஆனால் மேலி டத்து உத்தரவுகளால் அடுத்த நாளே மூவரும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தினால், மனக்கசப் புற்ற ஐ.தே.கவின் மேல் மாகாண சபை உறுப்பினரும் புகழ்பெற்ற நடி கருமான சனத் குணதிலக தனது ஐ.தே.க அங்கத்துவத்திலிருந்து விலகியுள்ளார். இச் சம்பவத்தை எதிர்த்து பல பாகங்களிலும் இருந்து பல கண்டனக்குரல்கள் எழுந்த வண்ணமுள்ளன. கலை ஞர்கள் இச்சம்பவத்தை கண்டிக் கும் முகமாக, மேலும் பல நடவடிக் கைகளில் ஈடுபடவுள்ளதாக தெரி யவருகிறது.

ஐ.தே.கட்சி தனக்கு எதிரான சக்தி கள் மீது வன்முறையையும் ஒடுக்கு முறை நடவடிக்கைகளையும் கட்ட விழ்த்து விடுவது இதுதான் முதல் தடவை என்பதல்ல. ஜே.ஆர்.ஜய வர்த்தன அவர்களுடைய காலத்தி லிருந்து இத்தகைய வன்முறைகள் உக்கிரம் பெற்றன.

கலைஞர்கள் கூட்டத்தைக் குழப்பி யவர்களிடம் இருந்து பறிக்கப் பட்ட ஆவணங்களில் இங்கிலாந் தில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிவரும் கீனி மீனி சேர்விஸ் (KMS) என்ற கூலிப்படைகளைப் பயிற்சி அளிக்கும் நிறுவனத்துடன் தொடர்பான விவரங்களும் இருந் திருக்கின்றன.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் காலத் தின் போது வடக்குக் கிழக்குப் 'ப யங்கரவாதப்' பிரச்சினைகளை அடக்க இஸ்ரேலிய மொஸாட் பிரித்தானிய எஸ்.ஏ.எஸ், கீனி மீனி சேர்விஸ் போன்ற அமைப்புக ளின் உதவி பெறப்பட்டமையை நாம் நினைவில் கொள்ள வேண் டும்.

சம்பவம் நடந்த பிற்பாடு சகலர்க ளுக்கும் கொலை பயமுறுத்தல்க ளும், எச்சரிக்கைகளும் தொலை பேசி மூலமும் கடிதமூலமும் கிடைத்து வருவதாக விடுதலைக் கலைஞர்கள் ஒன்றியம் அறிக்கை யொன்றின் மூலம் குற்றம் சாட்டி யுள்ளது.

_பாரதி

## கட்சி மாறியதால் கொலையா ?

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா - பண்டாரிகுளம் குளக் கட்டில் இடம்பெற்ற ஒரு மர்மக் கொலை பாதுகாப்பு வட்டாரங்களி லும் பொதுமக்கள் மத்தியிலும் பல் வேறு வினாக்களையும் சந்தேகங்க ளையும் கிளப்பியுள்ளது.

சுமார் 22-25 வயது மதிக்கத்தக்க நடராசா ஞானேந்திரன் என்ற இந்த இளைஞன் ஓமந்தை பாலமோட் டையைச் சேர்ந்தவர். புலிகளின் உறுப்பினராக இருந்து சுமார் ஒரு வருடத்துகாலத்துக்கு முன்னர் இரா ணுவத்தினரிடம் சரணடைந்தார். புலிகள் தொடர்பான தமது நடவ டிக்கைகளில் உதவுவதற்கென (எலார ரெஜிமென்துவ) எல்லா ளன் ரெஜிமன்ட் என்ற படைப்பி ரிவு ஒன்றை வைத்துள்ளார்கள். இதில், இயக்கங்களிலிருந்து பிரிந்து உதிரிகளாக உள்ள, தமக் குப் பயன்படக்கூடிய இளைஞர்க ளையும் புலிகளில் இருந்து சரண டைபவர்களில் பிரயோசனமான வர்களையுமே சேர்த்துக் கொள் கின்றார்கள்.

'ஆமி இன்ட்' என அழைக்கப்படும் பிரிவினராக உளவு வேலைக ளுக்கே இராணுவத்தினர் இவர் களை உபயோகித்து வருகின்றார் கள். சாதாரண ஒரு இராணுவ வீர னைப் போல, இவர்களுக்கு சம்பள மும் சலுகைகளும் வழங்கப்படு கின்றது. எல்லைப்புற வீதித்தடை முகாம்களிலும், இராணுவக் கட் டுப்பாட்டில் இல்லாத பகுதி மக்க ளோடு தொடர்பு கொள்ளக்கூடிய பகுதிகளிலும் கடமையில் ஈடுபடு வார்கள். இப்பிரிவில் செட்டிகுளம் மன்னார் வீதி பகுதிகளில் கடமை யாற்றி வந்த இவர், அடிக்கடி வவு னியா நகருக்கு வந்து, பல வழிகளி லும் உல்லாசமாக பொழுதைக் கழித்துவிட்டுத் திரும்பிச் செல்வது வழக்கமாம். அவ்வாறு கடந்தவா ரம் வந்திருந்த போது அழுங்காமல் நழுங்காமல் இழுபறிகள் ஏதும் இல் லாத நிலையில் வெகு நேர்த்தியாக கழுத்திலும் மார்பிலுமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 90 m.m கைத்துப்பாக்கியே கொலை செய் யப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஆளரவம் இல்லாத குடிமனைகளி லிருந்து ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் பண்டாரிகுளம் குளக்கட் டில் உள்ள மரத்தடி பிள்ளையார் கோவிலருகிலேயே கொல்லப்பட் டுள்ளார். இந்த கொலையைச் செய் தது யார்? எதற்காக கொலை நடந்து என்பது குறித்து பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டுள் ளார்கள். இவரது சடலம் கண்டுபி டிக்கப்பட்ட அடுத்தடுத்த தினங்க ளில் பட்டாணிச்சி புளியங்குளம் நெளுங்குளம், இராசேந்திரன் குளம் போன்ற கிராமங்களிலும் இரண்டு இளைஞர்கள் கொல்லப் பட்டதாக வதந்திகள் பரவி பொலி சாரை அலைத்தன.

படையினர், பொலிஸ், புளொட், ரெலோ என 'பாதுகாப்பு' படைக ளும் குழுக்களும் நிலை கொண் டுள்ள இடத்தில் இந்தக் கொலை நடை பெற்றிருக்கிறது. உண்மையி லேயே இவர்கள் இதனைக் கண்டு பிடிக்க முடியாமலிருக்கிறார்களா? அல்லது கண்டு கொள்ளாமல் இருக்கிறார்களா?

## யார் கொன்றார் இவரை?

ஏறாவூர் பிரதேச சபைக்கு ரெலோ இயக்கத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவ ரான வெள்ளப்பொடி அழகையா அவர்கள் கடந்த 17ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்ட தினத்திற்கு 3நாட்க ளுக்கு முன்பே கூட்டணி முன் னாள் எம்.பி ஜோசப் பரராஜசிங் கத்திற்கு இவர் இரவுச் சாப்பாடு கொடுத்துள்ளார். கூடவே தற் போது கூட்டணி ஆதரவாளராக வும் மாறியுள்ளார். இவர் புலிகளா லேயே சுட்டுக் கொல்லப்பட்டதாக தினகரனில் செய்தி வெளியாகியுள் ளதுடன் ரெலோ இயக்கத்தினரும் புலிகளைக் குற்றம் சாட்டியுள்ள னர். கூடவே, கூட்டணியினருக்கு இவர் ஆதரவாகச் செயற்பட்டதா லேயே புலிகளால் சுட்டுக் கொல் லப்பட்டார் எனவும் பரவலாக பிரச் சாரம் செய்யப்படுகின்றது. பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றபோது சுடப்படாத வெள் ளப்பொடி அழகையாவை கூட்ட ணியில் சேர்ந்தார் என்பதற்காக புலிகள் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்ற வாதத்தை நிராகரிக்கும் ஏறா வூர் வாசிகள், அப்படியானால் அவர்கள் முதலில் கூட்டணியி னரை அல்லவா சுட்டிருப்பார்கள் என்று கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆயினும், அழகையா கொலைக்கு அவரது 'கட்சிமாறல்' காரணமாக இருக்கலாம் என்பதை அவர்கள் நிராகரிக்கவில்லை.

## மூளைப்பிசகு யாருக்கு ?

கடந்த 13ம் திகதி புதன்கிழமை தலவாக்கலை மத்திய மாகாண வித் தியாலயத்தில் ஆறுமுகம் தொண்ட மான் தலைமையில் இ.தொ.கா வின் தேர்தல் முன்னோடிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இ.தொ.கா ஆதரவாளர்கள் உட் பட அயல் பிரதேசங்களில் இருந் தும் பலர் சமூகமளித்திருந்தனர். பொகவந்தலாவப் பகுதியில் இருந்து வந்த தோட்டத் தொழி லாளி ஒருவர் இ.தொ.கா வினரை நோக்கிக் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார். இக்கேள்விக ளுக்குப் பதிலளிக்கமுடியாத ஆறு முகம் தொண்டமானும் அவரது சகாக்களும் அத்தொழிலாளியைப் பிடித்து நையப்புடைத்து பொலி சில் ஒப்படைத்துள்ளனர். பின்பு, விடயம் பூதாகரமாகி தமக்கு தேர் தல் காலத்தில் சிக்கல் ஏற்பட்டுவி டுமோ என்ற பயத்தால் மூளைப்பி சகுடையவர் எனக் குற்றம்சாட்டி அவரை விடுதலை செய்துள்ளனர் எனத் தலவாக்கலையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக் கின்றன.

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.